செந்தமிழ்

தொகுதி—75 மார்ச் 1981 பகுதி 1

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

ஆசிரியர் :
டி. பி. எம் பெரியசுவாமி

உள்ளுரை

—oOo—

எண்	பொருள்	பக்கம்
1.	இலக்கியத்தில் இமயமலை —கு. சதாசிவன்	227
2.	சேதுபதியின் கொடைத்திறம் பற்றி பம்மல் சம்பந்த முதலியார் — ஆசிரியர்	241
3.	பறவைகளின் வலசை —திரையன்	243
4.	இளைஞர் எழுச்சிப்பண் —அன்பு. கருணையானந்தர்	249
5.	கல்கத்தா! ஓ! கல்கத்தா!! —பழனி. அரங்கசாமி	252
6,	கற்றறிதல் ஒன்றா? இரண்டா? —பண்டித. புலவர் வை. தங்கமணி	262
7.	கரந்தை தமிழ்ச் சங்க வரலாறு —புலவர் இரா. சின்னத்தம்பி	267
8.	எழுத்தாளருக்கு வேண்டியது கருத்துத்தெளிவா? எழுத்து வன்மையா? பழனி. அரங்கசாமி	273
9.	வானவில் —கவிஞர். எச். முஸ்தபா	276

இலக்கியத்தில் இமயமலை

கு. சதாசிவன்
M.A.M.Phil
மதுரைப் பல்கலைக் கழகம்

இமயமலையின் அடிவாரத்திற்குப் படையெடுத்துச் சென்றவன் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனே. இப்படை-யெடுப்பில் அவன் அடைந்த வெற்றியால் பெற்றதே அப்பெயர் எனலாம். அந்நாளில் கொண்கானத்திற்கும் வட இமயத்திற்கும் இடையிற் கிடந்த நாடு ஆரியகம் ஆகும். யவனர் குறிப்புகளும் அப்-பகுதியை ஆரியகம் (Ariake) என்றே குறித்துள்ளன. தமிழகத்துக்கு நேர் வடக்கேயுள்ளோர் 'வடுகர்' என்றழைக்கப்பட்ட காலத்து, வடுகருக்கு வடக்கேயுள்ளோர் 'வடவாரியர்' என்று அழைக்கப்-பட்டனர். இவ்வடவாரியரையே இப்பாண்டியன் வென்றான் இவன் கடைச்சங்க காலத்துப் பாண்டியருள் ஒருவனாவான். இவனும் தம் குலச்சின்னமாகிய கயல் பொறியை இமயத்துச்சியில் பொறித்து மீண்டான். இச்செப்தியைக் கூறும் சிலப்பதிகார அடிகள் :

"குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி" என்று

புகழ்ந்து பாடிற்று. மேலும் இந்நூல் "கயலெழுதிய விமய நெற்றியின்" என்று இப்பாண்டியனின் சிறப்பினைக் கூறிற்று.

இவனை 'மலயத்துவசன்' என்றும், 'உக்கிரகுமாரன்' என்றும் புராணங்கள் கூறுகின்றன. "பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதி போல்" என்றார் பெரியாழ்வார்.

இப்பாண்டியனின் இச்சிறப்புச் செய்தியை பல செப்புப்பட்ட-யங்களும், பாண்டியரின் மெய்க்கீர்த்திகளும் விளம்புகின்றன. நெடுஞ்-சடையன் பராந்தகன் சீவரமங்கலச் செப்பேடுகள் :

"தென்னவன் வானவன் செம்பியன் வடவரை
இருங்கய லாணை யொருங்குட னடா அய்"

என்றும்; சடையவர்மன் பராந்தக பாண்டியன் செப்பேடுகள் :

"கயலினை வட வரைப் பொறித்தும்" என்றும்;

மூன்றாம் இராசசிங்க பாண்டியன் சின்னமனூர்ச் செப்பேடுகள்:

"வசையில் மாக் கயல் புலி சிலை
வடவரை நெற்றியில் வரைந்தும்" என்றும்;

பராந்தக பாண்டியன் மெய்க்கீர்த்தி :

"மாக்கடலை யெறிந்தருளி மலையத்துக் கயல்பொறித்து"
என்றும்;

வீர பாண்டியன் மெய்க்கீர்த்தி:

"மாபாரதம் பொருது மன்னவர்க்குத் தூது சென்று
தேவாசுர மதுகை தரித்துத்
தேனாரு மறையுங் கொண்டருளி
வடவரையிற் கயல் பொறித்த வானவர்கோ..."
என்றும்

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி :

"வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட
இருங்கடல் வலயத் தினிதறம் பெருக"
என்றும்;

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி :

"இமையவர் விழாக்கொடி யிடந்தொறு மெடுப்பக்
கருங்கலிக் கனல்கெடக் கடவுள் வேதியர்
அருந்தொழில் வேள்விச் செங்கனல் வளர்ப்ப"
என்றும்;

சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி :

"சிமையவரைத் திறன் மடந்தை திருத்தோளின்
மிசைவாழ
இமையவர்கோ னன்றிட்ட எழிலாரங் கழுத்திலங்க"
என்றும்;

மாறவர்மன் குலசேகர பாண்டியனின் மெய்க்கீர்த்தி :

"மீனம் பொன்வரை மேருவி லோங்கவும்" என்றும்;

அரிகேசரி பராக்கிரம பாண்டியனின் மெய்க்கீர்த்தி :

"கயலிணை யுலகின் கண்ணெனத் திகழச்
சந்திர குலத்து வந்தவதரித்து" என்றும்

கூறி, இப் பாண்டியனின் இத் தீரச் செயலைப் பாராட்டின.

இமயப்படையெழுப்பு கூட்டுப்படையெடுப்பா? (Military Confederacy of the Tamils):

முடிமன்னர் மூவரின் வடநாட்டுப் படையெடுப்பு மும்முடி மன்னர்களின் இணைந்த கூட்டுப்படை யெடுப்பா? அல்லது தனித்தனியான படையெடுப்புகளா? முன்னதாயின் அக்கூட்டுப் படையின் தலைவன் யார்? பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய நூற்களை நோக்குமிடத்து இவை தனித்தனியான படையெடுப்புகள் என்றே தோன்றும். ஆயினும் இதனை முடிந்த முடிபாகச் சொல்ல இயலவில்லை. ஏனெனில் இளங்கோ அடிகள் கயலெழுதிய விமய நெற்றியின், அயலெழுதிய புலியும் வில்லும்" என்று கூறுகிறார். நெடுஞ்சடையன் பராந்தகனின் வேள்விக்குடிச் செப்பேடுகளும் "சிலையும் புலியுங் கயலுஞ் சென்று, நிலையமை நெடுவரை யிடவயிற் கிடா அய்" என்கின்றன. எனவேதான் மு. இராகவையங்கார் அவர்களும். ஔவை சு. துரைசாமி அவர்களும் இப்படையெடுப்புகள் இணைந்த படையெடுப்புகள் என்றனர் போலும். இராகவையங்கார் அவர்கள் "சேர சோழ பாண்டியர் மூவரும் இமயத்தில் இலச்சினை பொறித்த பெருமை தத்தமக்குரியதாகத் தனித்தனியே பாராட்டிக் கொண்டனராயினும், அம்மூவரும் ஒன்று கூடி வடவருடன் போராடி அப்பெருமை படைத்தவர் என்றே நாம் கருதத்தக்கது" என்று கருதுகின்றார். அதுபோன்று துரைசாமி அவர்களும் "இவ்வாறு எழுந்த சேரப்படையுடன் சோழப் படையும் பாண்டியப் படையும் கலந்து கீழ்க்கடலும் தென்கடலும் மேலைக்கடலும் ஒன்று கூடி இமயம் நோக்கியெழுந்தது போல நிரந்து செல்லலுற்றன." என்றார்.

சேர, சோழ, பாண்டியரும் சேர்ந்தே வடவாரியரைத் தாக்கினர் என்ற கருத்திற்கு ஆதரவான செய்திகள் சிலப்பதிகாரத்தில் பரக்கக் காண்கிறோம். இளங்கோ ஓரிடத்தில்

"தென்றமிழ்நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழும் இமய நெற்றியில் விளங்குவிற் புலிகயல்
பொறித்த நாள்" [சிலம்பு : 29 : உரை. மடை]

என்றும் மற்றோரிடத்தில்

"கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதி" [சிலம்பு: 7: 11]

என்றும்; மற்றுமோரிடத்தில்

"கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தனராயினு மாங்கவை"

என்றும் [சிலம்பு: 25: 153-154]

இச்சிறப்பினைப் பாடினார். இவ்வெடுத்துக் காட்டுகளில் இறுதியான எடுத்துக்காட்டு இக்கருத்தினைப் பொதிந்து நிற்கின்றது. சேரன் செங்குட்டுவன் படையெடுத்துச் சென்றபோது, பகைவராகிய கொங்கர் அவனுக்குப் புலி கயல் பொறிக்கப்பட்ட கொடிகளைக் கொடுத்து, அவனடி பணிந்தனர் என்பதாம். எனவே செங்குட்டுவன் வடபுலம் செல்லுமுன் இப்பொறிகள் அப்பதிகளில் நிலை நாட்டப்பட்டன என்பது பெறப்படும் முடி மன்னர் மூவரும் ஒன்றுபட்ட வலியுடன் படையெடுத்துச் சென்று பனிபடு நெடுங் கோட்டிமயத்தில் தங்கள் சின்னங்களைப் பொறித்தனர் என்பது காணலாம். வரலாற்றுச் சிறப்புகளை வரலாற்று நயத்துடன் வரைந்த இளங்கோ இப்படையெடுப்புகளைத் தனித்தனியான படையெடுப்புகளாகக் கருதாது, மூவரும் செய்த சாதனையாகக் கொண்டு புகழுவாராயினார்.

அரசர் பலர் ஒருங்கிணைந்து பகைவர் மலையைக் கைப்பற்றுவராயின், அப்பலர் சின்னங்களும் ஒருசேர அம்மலையிற் பொறிக்கப்படுவது பண்டைய வழக்கேயாகும். இச் செயலைப் புறப்பாட்டொன்று விளக்குகிறது. நட்பினராயிருந்த சோழ பாண்டியரிருவர் சின்னங்களும் பகைவர் குன்றுகளில் பொறிக்கப்படுதல் வேண்டுமென்று புலவர் ஒருவர் இவர்களை வாழ்த்தியருளினார். அப்புறப்பாடல்:

"கொடுவரிக், கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாக பிறர் குன்றுகெழு நாடே" [புறம்: 58]

என்பதாம்.

இதுபோன்று அக்காலத்து இச் சேர, சோழ, பாண்டியரும் தாம் பெற்ற வெற்றியின் அடையாளமாக இமயமலைக்கண் தத்தம் பொறிகளை ஒருங்கே பொறித்தனர் எனலாம்.

மேலும் இக்கருத்தினை ஆதரிக்கும் வகையிலான பிறிதொரு வரலாற்றுச் செய்தியும் உள்ளது. இச் செய்தி தமிழகத்தில் இணைந்த கூட்டுப்படையொன்று கலிங்க மன்னன் காரவேலன் காலத்து இயங்கி வந்தது என்பதே. இக் கூட்டுப்படை கலிங்க நாட்டைப் பல முறை தாக்கியதாகவும், அதனைக் காரவேலன் வெற்றி கொண்டான் என்பதாகவும் அவன் ஆணையில் வரையப்பட்ட ஹதிகும்பா கல்வெட்டு அறிவிக்கின்றது. இக் கல்வெட்டு வரையும் காலத்து இத்தமிழ்க் கூட்டுப்படை ஏறக்குறைய 113 ஆண்டு கால பழக்கமுடையதாயிருந்தது. கி மு. இரண்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியையொட்டி வரையப்பட்ட இக் கல்வெட்டுப்படி, இத் தமிழ்க் கூட்டுப் படையின் முன் வாழ்வைக் கணக்கிட்டால், அது மௌரியர் காலத்தும் இயங்கி வந்தது என்பது புலனாகும். 'வம்ப மோரியர்' தென்னகம் நோக்கிப் படையெடுத்த காரணத்தால், அதனை முறியடிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட படையணியாகவே இது இருக்கலாம். காரவேலனால் வெற்றி கொள்ளப்பட்டதே தவிர இப்படையணி அழிக்கப்படவில்லை என்பதும் அக்கல்வெட்டால் அறியலாம். காரவேலன் இறந்த பின்னர் புது வல்லமை பெற்று புதுப் பொலிவுடன் காட்சி தந்த இக் கூட்டுப்படையே இவ்விமயப் படையெடுப்பை வெற்றியுடன் நடத்தியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

தமிழரின் புகழ் பெற்ற இக் கூட்டுப்படையெடுப்பை இளங்கோ தவிர்த்த மற்ற பெரும்புலவர்கள் தாம் பாடிய பாக்களில் குறிப்பிட வில்லையே என்று கேட்கத் தோன்றுகிறது.

முத்தமிழ் நாடுகளையும், முத்தமிழ் நாட்டு மன்னரின் சிறப்புகளையும் இளங்கோவைப் போன்று ஒருங்கிணைத்துப் பாடிய புலவர்கள் மிகச்சிலரே. அப்புலவர்கள் வாழ்ந்த காலம் வேறுபட்டதே. மேலும்

அப்புலவர்கள் இளங்கோ தேர்ந்தெடுத்த நீள்கதையை ஒத்த கருப்பொருளைத்தம் கவிதைகளுக்காகக் கொண்டிலர் பண்டைக் காலப் பெரும் புலவர் பெரும்பாலும் குறிப்பிட்ட மன்னரையே, அம்மன்னனின் நாட்டையே, அம்மன்னனின் குடும்பச் சிறப்பையே பாடினராதலின், இக் கூட்டுப்படையெடுப்பில் பங்கு கொண்ட மன்னர்களைத் தனித்-தனியே பாடிப் புகழ்ந்தனர். மேலும் இணைந்த நிலையில் மூவரையும் பாடுவதாயின், யாருடைய சிறப்பினையும் உயர்ந்து போற்றுதல் இயலாது. அவ்வாறு செய்யாராயின் தம் காரியமும் கைகூடாது என்றும் அவர்கள் அறிந்திருந்தனர். இம் மூவரில் ஒருவரை மிகப் புகழ்ந்து பாடி மற்றையோரைப் புகழ்ந்து பாடுவராயின், அவர்களிடை-யே பகையை வளர்த்த வருத்தத்திற்கும் ஆளாகுவர். அக் காலத்துப் புலவர் பெருமக்கள் பெரும்பாலும் ஒரு நாட்டரசன் எல்லையை விட்டு, மற்ற நாட்டரசன் எல்லையைத் தாண்டிப் பிறிதொருவன் அவைக்குச் செல்லவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை சேரநாட்டைப் பாடிய புலவர்கள் பெரும்பாலும் அந்நாட்டிலேயே உறைந்தனர். சேரனைப்பாடினோரும்,பாண்டியனைப்பாடினோரும் அவ்வவ்வாறே. ஆகவே அவர்கள் தங்கள் பாக்களில் இவற்றைப் பாடவில்லையே என்று குறைபட்டுக் கொள்ள வேண்டாம்.

இப்படையெடுப்பைத் தலைமை தாங்கி நடாத்திச் சென்ற தமிழன் யார் என்பது ஆய்தற்குரியது.

அறிஞர் மு. இராகவையங்கார் இப்படைத் தலைவன் சோழ-னாகிய திருமாவளவனே என்றும் ஔவை சு. துரைசாமி அவர்கள் சேரனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்றும் கருதுகின்றனர். பாண்டியனைப் பற்றிய வேறுபட்ட கருத்துக்கள் இதுகாறும் அறிஞரி-டையே தோன்றாமையின், பாண்டியன் இப்படையை நடத்திச் செல்ல வில்லை என்றும், பாண்டியப் படை இப்படையின் பகுதிப் படையாய் இயங்கியது என்றும் கொள்ளலாம். திருமாவளனே இப் படையெடுப்-பைத் தலைமை ஏற்று நடத்தினான் என்பதற்கு அய்யங்கார் அவர்-கள் தரும் கருத்தமைதிகள் வருமாறு: "இங்ஙனம், மூவரசருங்கூடி நிகழ்த்திய இமயப் படையெடுப்பில், சோழனான திருமாவளவனே தலைமை வகித்தவனாதல் வேண்டும் என்று நாம் கருதுதல் தகும். அறிவு, ஆற்றல், பெருமைகளில் அவனே தன் காலத்தில் இணையற்று விளங்கியவன் கடைச்சங்க காலத்து வாழ்ந்த சோழருள் முற்பட்ட-வன் இவன் என்றே தோன்றுகின்றான்". இம்முடிவுக்கு அவர்

தரும் ஆதாரங்களும் ஆராயத்தக்கவை. முதலில் அவர் சிலப்பதி-காரத்தில் திருமாவளவனின் வடநாட்டுப் படையெடுப்புப் பற்றிக் கூறப்பட்ட கருத்துக்களை எடுத்துக் காட்டினார். அவன் இமயத்துக் கப்பாலும் செல்ல விழைந்தான் என்றும், அவனுடைய அத்திட்டத்தை இமயமலை தடுத்தது என்றும், அவன் வச்சிர நன்னாட்டு மற்றும் மகத நன்னாட்டு மன்னரை வென்றடக்கினான் என்றும், அவந்தி வேந்தனை நண்பனாகக் கொண்டான் என்றும் சிலம்பு கூறுகின்றது. மேலும், சிலம்பின் மங்கல வாழ்த்துப் பாடலும் இதனை வலியுறுத்து-கின்றது என்றும் அவர் கொள்வாராயினார். இறுதியில் வரலாற்றுப் புவியியல் தொடர்பான ஒரு கருத்தையும் அவர் சுட்டுவார். அஃதாவது இன்னும் சும்பிப்பள்ளத்தாக்கில் சோழமலை, சோழக்கணவாய் என்ற வழக்குகள் இருக்கின்றன என்பதுவாம்.

இப்படைத் தலைவன் இமயவரம்பனே என்பதற்கு ஔவை சு. துரைசாமி அவர்கள் தரும் கருத்துக்களைக் காண்போம். இச் சேரன் 'தம்மவர் அல்லாத பிறவேந்தரை வென்று அவர் முடிப் பொன் கொண்டு கழல் செய்து மார்பில் அணிந்திருந்தான்' என்றும், அப்படி வெற்றி கொள்ளப்பட்டவர் எழுவர் என்றும் தெரிகிறது. இவ்வெழுவரும் இவனுடைய திட்டத்திற்கு ஊக்கம் தந்தனர். "ஏனைச் சோழ பாண்டியர்க்குத் திருமுகம் போக்கி அவர் கருத்தை அறிய முயன்றான். அந்நாளில் சோழ -பாண்டியர்கள், தமிழுக்கு வரம்பாகச் செய்யும் சேரமான் முயற்சியை வாழ்த்தித் தங்கள் நாட்டினின்றும் இருபெரும் படைகளை விடுத்துத் துணை செய்தனர். இமயச் செலவுக்--கெனச் சேர நாட்டிலும் பெரும் படை திரண்டது யானை, குதிரை, தேர் என்ற படை வகைகளும் வில், வேல், வாள் முதலியன ஏந்தும் படைவகைகளும் அணியணியாய் இமயம் நோக்கிப் புறப்பட்டன. இவ்வாறு எழுந்த சேரப் படையுடன் சோழப் படையும் கலந்து கீழ்க் கடலும் தென் கடலும் மேலைக் கடலும் ஒன்று கூடி இமயம் நோக்கி யெழுந்தது போல நிரந்து செல்லலுற்றன" என்றார்.

இவனுக்கு அடிபணிந்தோரும், நட்பு நாடியவரும் பெரும் பொருட்களைத் திறையாகச் செலுத்தினர் பொன்னும், பொருளும், வைரமும், பண்டங்களும் அவற்றிலிருந்தன. அப்பொருட்களை தன்னோடு போந்த தானைத் தலைவர்கட்கும் பரிசிலாகக் கொடுத்து மகிழ்வித்தான். சோழ பாண்டியப் படைத் தலைவர்கட்கும் உரிய சிறப்புக் களைச் செய்தான். எஞ்சியவற்றைத் தம் தலைநகரான மாந்தைக்கு.

கொண்டு வந்தான். எனவே இச் சேரன் 'இமயவரம்பன்' என்று புகழ்ந்து பாடப்பட்டான் என்றும் அவ்வறிஞர் கூறுவார். இவற்றிற்கு ஆதாரமாக பதிற்றுப்பத்துப் பாக்களை எடுத்துக் காட்டுவார்.

இச்சேரன் கடம்பரையும், யவனரையும், தம் நாட்டுப் பகை-யரசரையும் அடக்கியவன். இச் சேரனின் செல்வாக்கு கரூர் வரை பரவியிருந்தது. இவன் பெருமளவு யானைப் படையை வைத்திருந்தான். வில்லைப் பயன்படுத்திய போர் செய்வதில் சேரர் வல்லவர். குதிரை-களை மேல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, சிறந்த குதிரைப் படையையும் இவன் பெற்றிருந்தான்.

ஆனால் இச்சோழனோ இலங்கைத் தீவைக் கைப்பற்றியவன். காவிரிப்பூம் பட்டினத்தைச் சிறப்புறச் செய்தவன். கடற்படையைச் சிறக்க வைத்திருந்தவன். கங்கைப் புறத்து நாடுகள் இவனுக்குச் சேரனைவிட அண்டையிலிருந்தன.

மேற்கூறிய கருத்துக்களை நுணுகி ஆராயின், இப்படை-யெடுப்பின் தலைவன் திருமாவளவன் என்றோ, இமயவரம்பன் என்றோ நேரடியான ஆதாரக் குறிப்புகள் இல்லாக் காரணத்தால் உறுதியாகக் கூறிவிட இயலவில்லை.

சேரன் செங்குட்டுவனின் படையெடுப்பு :

முத்திரு நாட்டு மன்னரின் இணைந்த படையெடுப்புக்குப் பின் இமயம் நோக்கி விரைந்து முன்னேறிய தமிழ் மன்னன் சேரன் செங்குட்டுவனே. இவனுடைய திட்டமிட்ட படையெடுப்புப் பற்றிய செய்திகள் பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பத்திலும், சிலப்பதிகாரத்திலும் உள்ளன. இவன் "குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி மகள் ஈன்ற மகன்" ஆவான். இவன் திருமாவளவனுக்குப் பின் சோணாட்டில் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் தலையிட்டுத் தம் மைத்துனருக்கு அவ்வரியணையைப் பெற்றுத் தந்தவன். இவன் கடற்-கொள்ளையரை எதிர்த்து விரட்டியவன். தமிழகத்தின் பெரும் பகுதி-யைக் கொண்டு ஆண்டவன்.

சேரன் செங்குட்டுவன் வடவாரியரை எதிர்த்துப் படை-யெடுக்கக் காரணங்கள் இருந்தன. வடநாட்டில் நடந்த இராசகன்னி யொருத்தியின் திருமணத்தில் விருந்தினராக வந்த ஆரியமன்னர்

பலர் ஒருங்கு கூடியிருந்து 'தமிழ்நாட்டரசர் போர்க்கோலம் பூண்டு வந்து இமயகிரியில் தம் சின்னங்களான வில், புலி, கயல்களைப் பொறித்துச் சென்ற காலத்து எங்களைப் போன்ற வீரசூரர்களான வேந்தர் இருக்கவில்லை போலும்' என்று இகழ்ந்து கூறுவாராயினர். தமிழரைப் பற்றி ஆரியவேந்தர் பழித்துக் கூறியமை கேட்க மாட்டாத மாதவர் சிலர் நடந்தனவற்றைச் செங்குட்டுவனுக்கு எடுத்துக் கூறினர். அவர்களைப் போன்று வீரஞ் செறிந்த மன்னர் வேறில்லை என்று இறுமாப்பெய்திருந்த அவ்வாரிய மன்னர்க்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்று செங்குட்டுவன் தலைப்பட்டான் இச்செய்தியை சிலப்பதிகாரம் பின்வருமாறு கூறுகின்றது.

"வடவாரிய மன்னராங்கோர் மடவரலை மாலைசூட்டி
உடனுறைந்த இருக்கை தன்னில் ஒன்றுமொழி
நகையினராய்த்

தென்றமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல் பொறித்த
நாள்

எம்போலு முடிமன்னரீங் இல்லைப் போலும் என்றவார்த்தை
அங்குவாழு மாதவர் வந்தறிவுறுத்து"
சிலம்பு : 29: உரைநடை]

வடவாரியர் செருக்கடக்க வேண்டிச் சேரரர் பெரும் படை இமயம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. நூற்றுவர்கன்னர் என்று அறியப்படும் சதகர்னிகள் சேரன் செங்குட்டுவனுக்கு உதவினர். நீலகிரி மலையிலிருந்து வடகிழக்காகப் பாய்ந்து, பெரும் தொலைவு தாண்டிய சேரப்படைகள் வடவாரிய நாட்டில் கனகன் விசயன் என்ற மன்னரின் படையுடன் மோதத் தொடங்கின. இவ்விருவாரிய மன்னருக்கு உத்தரன், விசித்திரன், உருத்திரன், பயிரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் ஆகிய வேந்தர்களும் துணை நின்றனர். அப்போர் பதினெட்டு நாழிகை நடந்தது. ஆரிய மன்னர் படை அழிந்து மாறிப் புறந்தந்து ஓடினர். கனகனும் விசயனும் சிறைப்பட்டனர். சேரன் முன்னேறிச் சென்று, இமயத்திலிருந்து கண்ணகி பொருட்டுக்

கல்லெடுத்து, அதனை அக் கனகவிசயர் முடிமேல் ஏற்றிக் கங்கையில் நீர்ப்படை செய்து சிறப்பித்துக் கொண்டு சேரநாடு வந்து சேர்ந்தான் இதனை விளக்கும்சிலப்பதிகார அடிகள் வருமாறு :

"பகைப்புலம் புக்கப் பாசறை யிருந்த
தகைப்பருந் தானை மறவோன் றன்முன்
உத்தரன் விசித்திர னுருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் றனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவரெல்லாம்
தென்றமி ழாற்றல் காண்குதும் யாமெனக்
கலந்த கேண்மையிற் கனக விசயர்
நிலந்திரைத் தானையொடு நிகர்ந்து மேல்வர ......"

[சிலம்பு: 26: 180—7]

வடவிமயப் படையெடுப்பில் இச்சேரன் பகைவரல்லாதார்க்கு எத்துன்பமும் தரவில்லை. வடமலையில் தவம் புரிந்த அந்தணரை ஓம்பினான். கொள்ளைச செல்வங்கள் அதிகம் கவர்ந்து வந்ததாகத் தெரிகிறது. தம் கால் பணிந்த வடவாரியரைச் சேரன் நன்கு நடத்தி-னான் கைது செய்து வந்தோரைப் பத்தினித் திருவிழாவன்று விடுதலை செய்தான். இனைய பல செய்திகளைச் சிலப்பதிகார நீர்ப்படைக் காதை விளக்குகின்றது.

இப்படையெடுப்புகள் நிகழ்ந்தனவா?

இப்படையெடுப்புகள் பற்றிய குறிப்புகள் பிற இலக்கியங்களில். குறிப்பாக வடமொழி இலக்கியத்தில் எங்கும் இல்லாக் காரணத்தால் இப்படையெடுப்புகள் நிகழ்ந்தன என்று அறிஞர் ஒப்புக் கொள்வதில்லை. இத்தென்றமிழ் மன்னர்கள் வடவாரியரை வெற்றி கொண்டனர் என்றால் அறிஞர் உலகம் ஐயப்படுகிறது தமிழ் இலக்கியங்களில் மட்டுமே குறிக்கப்பட்ட 'வம்ப மோரியரின்' தென்னகப் படையெடுப்பைக் கூறின் அது நிகழ்ந்தது என்று ஒப்புக் கொள்வர். அப்படைகள் தமிழகத்துள் புகுந்து மோகூர்ப் பழையனின் நாட்டை வெற்றி கொண்டபின். பொதியில் மலைவரை முன்னேறிச் சென்றன என்றால் மறுப்பதற்கில்லை என்பர். கலிங்க மன்னன் காரவேலன் காலத்தில் 113 ஆண்டுக்காலப் பழக்கமுடைய தமிழ்க் கூட்டுப்படை கலிங்க நாட்டைப் பன்முறை தாக்கியது என்று

அவனுடைய கல்வெட்டு கூறினும் அறிஞர் ஒப்புக்கொள்ளார். ஆனால் அக்கலிங்க மன்னன் அக்கூட்டுப் படையைச் சிதறடித்தான்என்று அதே கல்வெட்டு கூறின் அறிஞர் ஒப்புக் கொள்வர். வடநாட்டு மன்னனாகிய ஹர்ஷவர்த்தனன் பஞ்ச(ஐந்து)நாட்டையும் ஆண்டபேரரசன்என்றால் அறிஞர் விரும்பி ஏற்பர் ஆனால் சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசி அப்பேரரசனை வெற்றி கொண்டவன் என்றால், அது பற்றிய செய்தி ஹர்ஷர் காலத்து நூற்களில் கூறப்படவில்லையே என்று மறுப்பர். அதுபோன்று காஞ்சியின் விஷ்ணுகோபனை முதலாம் சமுத்திரகுப்தர் வெற்றி கொண்டார் என்று அலகாபாத் கல்லெழுத்தறிக்கை கூறின் பெருமிதத்துடன் ஒப்புக் கொள்வர். உடனே அவர்கள் அவனது நாட்டெல்லையைக் காஞ்சிக்கும் தெற்கே கொண்டு வந்து விடுவர் ஆனால் முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் கங்கைப் புறத்து மன்னர்களை வெற்றி கொண்டனர் என்றால் அறிஞர் மிகவும் வருத்தப்பட்டே ஒப்புக்கொள்வர்.

வேறுசிலர் வேறுபட்ட கருத்துக்களை முன் வைத்துள்ளனர். அவை (i) தென்னவர் படையெடுத்து வெற்றி வாகை சூடி, தம் பொறிகளைப் பொறிக்குமளவு வட நாடு சீரழிந்து போகவில்லை. அங்கு அரசோச்சும் மன்னர்கள் அனைவரும் மறைந்து விடவில்லை. (ii) இன்றிருக்குமளவு நிலவியல் அறிவு தென்னவருக்கு இருக்கவில்லை. படையெடுத்துச் செல்லத் தகுந்த நில வழிகளை அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் மேற்கொண்ட வழிகளைப் பற்றிய குறிப்புகளேதும் இலக்கியங்களில் காணக் கிடைக்கவில்லை இடமாற்றுத் தொடர்பு முறைகள் அன்று இவ்வளவு வளரவில்லை. எப்படித் தென்னகப் படைகளுக்குப் போதிய உணவும் போர்க்கருவிகளும், செய்திகளும் எட்டின? வடநாட்டுக் கால நிலையை தமிழ்ப் படைகள் எப்படித் தாங்கியிருக்க முடியும்?

இனி நாம் இவ்வினாக்களைச் சற்று ஆராய்வோம் கிறித்தவ யுகம் தொடங்கிய முதல் இரு நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் அரசியல் குழப்பம் மலிந்து காணப்பட்டது. நீண்ட காலம் நிலை பெற்றிருந்த மௌரியப் பேரரசு அசோகருக்குப் பின் சிதைவுற்றது அசோகன் தென்தமிழ் நாடுகளை அண்டை நட்பு நாடுகள் என்றே கொண்டான். அவன் நினைத்திருந்தால் தமிழகமும் அவனாட்சிக்கு

உட்பட்டிருக்கும். ஆனால் அவன் அவ்வாறு நினையாது அவற்றிற்குத் தனித்தன்மை வழங்கினான். அதற்குக் காரணம் தமிழரின் முன் சிறப்புகளே. அசோகருக்குப் பின் படைத்தளபதியாகிய புஷ்யமித்திர சுங்கன், பிரகத்திரதன் என்ற மௌரிய அரசனைக் கொன்று, பாடலி-புத்திரத்தைக் கைப்பற்றித் தம் ஆட்சியைத் தொடங்கினான். தென்னக-கத்தில் மௌரியப் பேரரசைச் சாதவாகனர் கைப்பற்றிக் கொண்டனர். சுங்கருக்குப் பின் கான்வர் என்ற இனத்தினர் வட நாடாண்டனர். வட நாட்டிலேற்பட்ட அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்தி யவனரும், பஹ்லவரும், குஷானர்களும் இந்தியாவினுள் நுழைந்து, அதுவரை இருந்துவந்தஅமைதியைகுலைத்தனர் வ புலத்தில்ஏற்பட்டஇந்நிலை தமிழர்களுக்குச் சாதகமாயிருந்தது. இக்குழப்பமான நிலையில் தமிழரின் படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும் குப்தர்கள் ஆட்சியைப் பிடிக்குமளவும் வட இந்தியாவில் இக்குழப்பமான நிலையே நிலைத்-திருந்தது. இந் நிலையில் யார் யார் வட நாட்டைத் தாக்-கினர் என்று வரையறுத்துக் கூறிட இயலாத நிலையில், இத்தமிழரின் படையெடுப்பு பற்றிய செய்திகளும் குறிக்கப்படாமல் போயிருக்கலாம்.

அடுத்ததாக இன்றிருக்குமளவு நிலவியல் அறிவு தென்னவருக்-கில்லா நிலையில் எப்படி அவர்கள் வடநாடு நோக்கிப் படையெடுத்-திருக்க இயலும்? வட நாட்டிலிருந்து மௌரியர் தென்னகம் நோக்கிப் படையெடுத்துள்ளனர். அப் படையெடுப்பு வழிகள் இத்தமிழர்க்கு முன்-னறிவாக அமைந்திருக்கும். அவர்களும் பாடலிபுத்திரத்திலிருந்து தென்னாடு நோக்கி வந்தனர்; இவர்களும் தென்னாட்டிலிருந்து பாடலிபுத்திரப் பகுதி நோக்கிப் படையெடுத்தனர். மேலும் இமயத்தின் கண்ணிருந்து வந்த முனிவர் மூலம்செல்லும்வழிகளைப்பற்றி நன்கறிந்-திருக்கலாம். சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பை, இளங்கோ கூறுவதுபோல் வரைபடத்தில் வரைந்தால் அழகான படையெடுப்பு வழி பிறக்கும் அதுபோன்று திருமாவளவன் வெற்றி கொண்ட வச்சிர, மகத நன்னாடுகளையும், அவந்தி நாட்டையும் வகைப்படுத்தி வரைபடத்தில் வரைந்தால் அவன்மேற் கொண்ட படையெடுப்பு வழி பிறக்கும். சேரன் செங்குட்டுவனுக்குத் தோற்ற வட புல மன்னர்களை வகைப்படுத்தி, அவர்களின் நாட்டை வரை-படத்தில் வரைந்தால் வடகிழக்கு இந்தியா பிறப்பதைக் காணலாம். வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து பெற்ற பண்டங்களை அவர்கள் உணவாகக் கொண்டிருப்பர் செய்தித் தொடர்பு முறைகளைப் பற்றி அவர்கள் அவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டார்கள். படையெடுத்து

வருமுன் தத்தம் நாடுகளைப் பாதுகாக்க வேண்டிய முறைகளைக் கையாண்டுள்ளனர் என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன. வேண்டிய செய்திகளை அவ்வப்போது வந்து போகிய முனிவர்மூலம் பெற்றனர் என்று கூறுதல் பொருந்துவதாகும்.

தென்னகக் கால நிலையும் வடபுலக் கால நிலையும் முற்றிலும் மாறுபட்டவைதான். இருப்பினும் இக்கால நிலையைத் தாங்கி எப்படி அலெக்ஸாந்தரின் படைகள் இந்தியாவுக்குள் நுழைந்தனவோ, அது போன்று தாம் கொண்ட முயற்சியில் வெற்றிபெற தமிழ்ப்படைகளும் அவர்களுங் கொவ்வாத காலநிலையையும் தாங்கியிருப்பர். மேலும் இப்படையெடுப்புகள் நிலையற்றவை என்பதனாலும், சிறிது காலமே நீடித்திருந்தன என்பதனாலும் காலநிலைபற்றிய பயம் அதிகம் ஏற்பட இடமில்லை.

ஆகவே தமிழரின் வடநாட்டுப் படையெடுப்பை வரலாற்று-உண்மைக்குப் புறம்பானது என்று ஒதுக்கிவிட வேண்டாம். பேராசிரியர் ஆரோக்கியசாமி "தற்கால ஆராய்ச்சிகள் மேற்கூறப்பட்ட கருத்திற்கு மாறுபட்ட முடிவினையே தருகின்றன" என்றார். தமிழர் வடநாட்-டைத் தாக்கினர் என்பதற்குச் சில சான்றுகள் அப்பகுதிகளில் இருக்கக் காண்கிறோம். இன்று சும்பிநதிப் பள்ளத்தாக்குப் பகுதியில் 'சோழக் கணவாயும்' (Chola pass), 'சோழமலையும்' (Chola range)* இருப்பதாக அறிகின்றோம். இவற்றை ஆராய்ந்த இலக்கிய அறிஞர் இராகவையங்கார் இவை தமிழரின் தொடர்பினை என்றும் பறை-சாற்றும் சான்றுகளே என்கிறார். மேலும் 'மணிப்பூர்' என்ற ஊர்ப் பெயர் 'மணிநகரம்' என்ற தமிழ்ப் பெயரின் திரிபே √ என்றும் இன்று கருதப்படுகிறது கல்கத்தா பகுதியில் தமிழ்ப் பெயர் கொண்ட ஒரு துறைமுகம் இருந்ததாக 'பெரிபுளூஸ்' என்ற நூல் கூறுகிறது.

இவையேயன்றி வேறுசில ஆதாரங்களும் வடமொழி இலக்கி-யங்களில் இருக்கின்றன பாண்டியர் பாண்டவர் வழி வந்தோர் என்றும், சேரரும் பாண்டியரும் குருச்சேத்திரப் போரில் பங்கு

---

*Imperial Gazetteer of India Sikkim, vol. x, b. 327; vol XXII, p. 365, Hand Gazetteer of India - Chola Pass; Encyclopaedia Britannica—Sikkim, vol. V. p. 667; vol. XX, p. 640.

√ இக் கருத்தினை இம்பால் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் 1979-இல் என்னிடம் கூறினார்.

பெற்றோர் எனவும், மகாபாரதத்தில் கூறப்படும் தண்டகாரணியம், தொண்டையர் நாட்டையும் குறிக்கும் எனவும், 'வம்பமோரியர்' பாடலியாண்ட மௌரியர் எனவும், கங்கை நதியில் தமிழ்க் கப்பல்கள் வாணிபம் மேற்கொண்டன என்றும் அறிஞர் கூறுவர். இவ்வாதாரங்களின் அடிப்படையில் நோக்கின் தமிழரின் படையெடுப்பு. வரலாற்றுண்மையே என்பது விளங்கும்.

(தொடரும்)

சேதுபதியின் கொடைத்திறம் பற்றி
பம்மல் சம்பந்த முதலியார்

நாடகத்தந்தை பம்மல் சம்பந்த முதலியார், எண்பதுக்கு மேற்பட்ட தமிழ் நாடகங்களை எழுதியவர். மலேசியா, ஈழம் போன்ற அயல் நாடுகளிலும் சென்று நடித்து நடிப்புத்திலகம் எனப் பெயர் பெற்றவர். 1896—இல் சுகுண விலாச சபையினைத் தோற்றுவித்த இவர் வழக்கறிஞராக இருந்து நீதிபதியாகவும் பணியாற்றியவர். 1943 ஆம் ஆண்டு ஈரோட்டில் நடந்த நாடகத்தமிழ் மாநாட்டில் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் தலைமையில் நாடகப் பேராசிரியர் என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. நாடகமேடை அனுபவங்கள் என்று இவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ள ஆறு பகுதிகளில், முதல் பகுதியிலிருந்து கீழ்க்காணும் கட்டுரை வெளியிடப்படுகிறது.

— ஆசிரியர்

"சென்னை விக்டோரியா ஹாலில் மேற்சொன்ன இரண்டு நாடகங்களையும் ஆடுவதற்கு ஏற்பாடுகள் செய்தோம். அவ்வாறு செய்வதில் எங்களுக்கு ஏற்பட்ட முதல் கஷ்டம் என்னவென்றால், நாடகங்களுக்கு, வேண்டிய திரைகள் இல்லாமையே. இலவசமாக திரைகள் வாடகைக்கு இப்பொழுது கிடைப்பதுபோல் அப்பொழுது கிடையாது. அன்றியும் அப்படிக் கிடைப்பதாயினும், எங்களுக்கு வேண்டிய திரைகள் அகப்படுவது கஷ்டமாயிருந்தது. ஆகவே எப்படியாவது எங்களுக்கு வேண்டிய திரைகளைப் புதிதாய்ச் செய்து கொள்வதென்று தீர்மானித்தோம். இதற்குக் கையில் காசில்லை; என்ன செய்வது என்று யோசித்து, ஒரு யுக்தி செய்தோம். அச்சமயம் ராமநாதபுரம் சேதுபதி அவர்கள் சென்னையில் வந்திருந்தார். அவரை சபைக்கு ஒரு பேட்ரன் (Patron) ஆகக்கோரி அவர் தயாள குணத்தின் மூலமாக ஏதாவது பொருள் சம்பாதிக்கலாம் என்று தீர்மானித்தோம் பாஸ்கர சேதுபதி அவர்களுடைய தகப்பனார், என்தகப்பனாருக்கு நன்றாய்த் தெரியும் என்று அறிந்த நான், இவ்-

விஷயத்தைப் பற்றி என் தந்தையிடம், சாப்பாட்டின் பேரில், மெல்லத் தெரிவித்தேன். அவரும் இதற்கிசைந்தார். சேதுபதி அவர்களுக்கு எழுதி ஒருநாள் நாங்கள் அவரைப் பார்ப்பதற்குக் குறித்துக் கொடுத்தார். அன்றைத் தினம், சபையின் நிர்வாக சபையாரை அழைத்துக் கொண்டு போய் சேதுபதி அவர்களிடம் என் தகப்பனர் விட்டார். அதன்பேரில் சேதுபதி அவர்களுக்கு ஒரு வந்தனோபசாரப் பத்திரிகையை நான் படித்தேன், அதன் பிறகு கொஞ்சநேரம், அவர் எங்கள் சபையைப் பற்றி விசாரித்தார். அப்பொழுது பேசியதில் எனக்கு ஒன்றுதான் நன்றாய் ஞாபகம் இருக்கிறது. நீங்கள் எப்பொழுது நாடகங்கள் நடத்தப் போகிறீர்கள் என்று அவர் கேட்டதற்கு, நான் மார்ச்சு மாதம் என்று பதிலுரைக்க, அச்சமயம், நானும் ராமநாதபுரம் மார்ச்சாய் (march) விடுவேன் என்று அவர் நகைத்துக் கொண்டு சொன்னார். பிறகு நாங்கள் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு வந்து விட்டோம். பிறகு சில தினங்கள் பயிரானது மேகத்தை எதிர்பார்ப்பது போல் அவரிடமிருந்து ஏதாவது கிடைக்குமாவென எதிபார்த்து வந்தோம். கூடிய சீக்கிரத்திலேயே அச்சீமான் ரூபாய் 300 எங்களுக்கு நன்கொடையாக அனுப்பினார் பின் வாங்காது கொடுப்பதையே தன் பிருதாகக் கொண்டிருந்த சீமான் அப்பொழுது எங்களுக்குச் செய்த உதவி மிகவும் பாராட்டத்தக்கதாம்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறியதின் உண்மையை அன்றே கண்டேன். இந்தத் தொகை எங்களுக்குக் கிடைத்தபோது நாங்கள் கொண்ட உவகை கொஞ்சநஞ்சம் அல்ல. உடனே இதைக் கொண்டு ஏழு திரைகள் எழுதிவைத்தோம். அக்காலத்தில் மதிராஸ் டிராமாடிக் சொசைடி என்று சொல்லப்பட்ட ஆங்கிலேயர்களுடைய நாடக சபையில் சீன்கள் எழுதிக்கொண்டிருந்த டுவார்ட் என்றும் பரங்கிக்காரனைக் கொண்டு அவைகளை எழுதி வைத்தோம்."

பறவைகளின் வலசை

—திரையன்

ஜெர்மனி, ரஷியா போன்ற குளிர் மிகுந்த நாடுகளில், பனிக் காலத்தில் ஆறு, குளம், ஏரிகள் பனிக்கட்டியாகவே உறைந்து விடும். பனித்துகள் ஒரு போர்வைபோல் நிலத்தையும் மூடியிருக்கும். இக் காலத்தில் பயிர்களும், புழு, பூச்சி முதலியவைகளும் வாழ இயலாது. ஆதலால் பறவைகளுக்கும் போதிய உணவு கிடைக்காது. எனவே உணவுக்காகவும், இனப்பெருக்கம் செய்வதற்காகவும் பறவைகள் இக்காலத்தில் வெப்ப நாடுகளை நோக்கிச் செல்ல வேண்டியிருக்கிறது. இதுவே வலசை (Migration) எனப்படுகிறது. ரஷியா போன்ற பிற நாடுகளிலிருந்து நமது நாட்டுக்குப் பறவைகள் வருவதைச் செங்கல்-பட்டுக்கு அருகேயுள்ள வேடந்தாங்கல் ஏரியில் இன்றும் காணமுடி-கிறது.

பறவைகள் குளிர்காலத்தில் மறைந்து விடுவதும், அடுத்த பருவத்தில் திரும்பவும் காணப்படுவதும், நெடுங்காலமாக மனிதனுக்கு ஒரு புரியாத புதிராகவே இருந்து வந்தது. குளிர் காலத்தில் பறவை-கள், குளம், குட்டைகளுக்கு அடியிலும் மரப் பொந்துகளிலும் பதுங்கிக் கொள்கின்றன என்று கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் நம்பினார். பறவைகள், குளிர்காலத்தின் போது நிலவுக்குப் பறந்து சென்று விடு-கின்றன என்று ஒரு பாதிரியார் கூறிக் கொண்டிருந்தார்.

ஜெர்மன் பேரரசர் பிரடெரிக் II (1194—1250) மத்தியதரைக் கடலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த பறவைகள் கூட்டம் கூட்டமாக தெற்கு நோக்கிச் செல்வதைக் கண்டார். ஐரோப்பியப் பறவைகள் குளிர்காலத்தில் எங்கும் பதுங்குவதில்லை; மாறாக அவை தெற்கு நாடுகளுக்குச் செல்கின்றன என்று அவர் குறிப்பிட்டார். பறவைகள் காலநிலை மாறுபாட்டினால் ஒரு நாட்டிலிருந்து பிறிதோர் நாட்டுக்குச் செல்-கின்றன என்ற கருத்தை முதன்முதல் வெளியிட்டவர் இவரே.

18 ஆம் நூற்றாண்டில் லியோனார்ட் பிரிச் ஒண்ட் (Leona Frisch Wound) எனும் ஜெர்மானியர் பறவைகளின் கால்களில்

சிவப்பு நிற நூல்களைக் கட்டிப் பறக்க விட்டார். அடுத்த ஆண்டு அதே பறவைகளைப் பிடித்துப் பார்த்தபோது நூலின் நிறம் மாறாமலேயே இருந்தது. இந்நிகழ்ச்சியினால் பறவைகள் குளிர் காலத்தில் தண்ணீருக்கடியில் சென்று வாழ்வதில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

டென்மார்க் நாட்டைச் சார்ந்த மார் டென்சன் (Martensen) என்பவரே பறவைகளின் போக்கினையும், வாழும் முறையினையும் காண்பதற்கு வளையமிடும் (Ringing) முறையை முதன்முதலில் தொடங்கியவர்.

தற்காலத்தில் பறவைகளின் வலசை, செல்லும் பாதை முதலியவை வளையமிடுதல் மூலமே அறியப்படுகிறது. பறவைகளைப் பற்றி ஆய்வு செய்வோர் ஏராளமான பறவைகளைப் பிடித்து அதன் கால்களில் அலுமினிய வளையத்தைப் பொருத்தி விடுவித்து விடுவர். அவ்வளையத்தில் முகவரி, எண், நாள் முதலியவை பொறிக்கப்பட்டிருக்கும். எங்கேயாவது அடிபட்டாலோ அல்லது பிடிக்கப்பட்டாலோ அதைப் பற்றியகுறிப்புகள் வளையத்தில் கண்டமுகவரிக்குத் தெரிவிக்க வேண்டும். பறவைகளின்வலசையைப் பற்றிப் பறவையியலார் (Ornithologists) இவ்வாறுதான் அறிந்து கொள்கின்றனர்.

1880 ஆம் ஆண்டு ஜூலை மாதம், ஜெர்மனியில் டெட்டர் (Detter) என்பவரால் மூன்று கொக்குகளுக்குக் காலில் வளையமிடப்பட்டது. ஆகஸ்ட் மாதம் அவை ஜெர்மனியிலிருந்து புறப்பட்டன. நான்கு நாட்கள் கழித்து 1,200 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள ஸ்பெயினில் அவைகள் பிடிபட்டன. பிரடெரிக் பால்ட்ஸ்ஃபெய்ன் (Friedrich Faltz Fein) என்பவர் ரஷியக் குடியரசு நாடுகளின் ஒன்றாகிய உக்ரேனிலிருந்து வளையமிடப்பட்ட ஒரு நாரையை விடுத்தார். பிறகு அந்நாரை ஆப்பிரிக்காவிலுள்ள சூடான் நாட்டில் பிடிபட்டது. மேற்கூறிய ஆய்வுகளின் மூலம் குளிர்காலத்தில் பறவைகள் வேறு நாடுகளுக்கு வலசை செல்வது உறுதி செய்யப்பட்டது.

இமயமலைப் பகுதிகளில் வாழும் பறவைகள் குளிர்காலத்தின் போது தெற்கு நோக்கி இலங்கை வரை செல்கின்றன. பறவைகள் இமயத்திலிருந்து தென்னாட்டிற்கு வந்து திரும்பவும் பறந்து செல்வதைத் தமிழர்கள் அக்காலத்திலிருந்தே கவனித்து வந்தனர். சத்தி-

முற்றப் புலவர் குமரிமுனையிலிருந்து, வடதிசை நோக்கிச் செல்லும்; பறவையை அழைத்துத் தன்மனைவியிடம் தூது செல்லுமாறுகேட்கிறார்

''நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச், செங்கால் நாராய்!
நீயும் நின் மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீராயின் எம்மூர்
சத்திமுற்ற வாவியுள் தங்கி......''

தமிழ் நாட்டுக் காடுகளில் பச்சைக் காடை (Pitta) என்னும் குருவிகளை மழைக் காலத்தில் காணலாம். இச் குருவிகள் இயல்பாக வாழுமிடம் இமயமலைப் பகுதியே. அங்கு மழைக்காலத்தில் நிலவும் குளிரைத் தாங்க முடியாமல் தெற்கு நோக்கி இலங்கைக்குச் செல்லும் வழியில் இவை தமிழ் நாட்டுக் காடுகளில் தங்கிச் செல்லுகின்றன. இதே போல் இமயத்தில் வாழும் மரக்காக்கை (Scolopex Rusticola) நீலகிரி மலைத் தொடருக்குக் குளிர்காலத்தின் போது வருவதாகக் கூறுகின்றனர் சைபீரியாவிலிருந்து (ரஷ்யா) கேபல்லா கேலிங்கோ (Capella Gallingo) எனும் பறவை ஏறத்தாழ 2,400 கிலோ மீட்டர்கள் கடந்து தென்னிந்தியாவிற்கு வருகிறது.

குளிர்காலத்தில், ஆர்க்டிக் வட்டத்தில் வாழும் ஆற்றுக்குருவி (Tern) ஆர்க்டிக் வட்டத்திலிருந்து அன்டார்டிக்காவுக்கு வலசை சென்று வேனிற் காலத்தில் திரும்பி விடுகிறது. இப்பறவை சென்று திரும்பும் தூரம் 35,000 கிலோமீட்டர்!

பறக்கும் வேகம், உயரம் முதலியவை பறவைகளின் இனத்திற்கு இனம் மாறுபடும். சில பறவைகள் தாழ்வாகவும், சில சுமார் 3000 முதல் 5000 அடி உயரத்திலும் பறந்து செல்கின்றன. சராசரியாக மணிக்கு 48 முதல் 64 கி. மீ வேகத்தில் பல பறவைகள் பறக்கின்றன. சில இரவிலும் சில பகலிலும் இடம் பெயர்ந்து செல்கின்றன பொதுவாக ஆண் பறவைகள் செல்ல வேண்டிய இடத்தை முதலில் அடைந்து விடும். பிறகு பெண் பறவைகள் அவற்றைத் தொடர்ந்து பறந்து செல்லும்.

"பிடியூட்டிப் பின் உண்ணும்களிறெனவும் உரைத்தனரே" என்று வரும் கலித்தொகைப் பகுதி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

பறவைகள் இடம் மாறிச் செல்லுகின்ற காலத்தில் குறிப்பிட்ட பாதையிலேயே செல்கின்றன. மீண்டும் அப்பாதையிலேயே வருகின்றன. காலநிலை மாறுபாட்டாலும் புயல் மழை ஆகியவற்றாலும் சிற்சில பறவைகள் வழியில் இறந்து விடுவதும் உண்டு.

தாய்ப் பறவைகள் வழிகாட்ட இளம் பறவைகள் தொடர்ந்து செல்கின்றன என முதலில் நம்பப்பட்டது. ஐரோப்பா நாட்டைச் சார்ந்த கக்கூ (cuckoo) பறவைகள் ஆப்பிரிக்காவிற்கு வலசை வந்து வேறு இனப் பறவைகளின கூட்டில் முட்டை இட்டுவிட்டுத் திரும்பிச் சென்று விடும். இன்னொரு இனப் பறவையால் முட்டை பொரிக்கப்பட்டு குஞ்சுகள் வளர்க்கப்படும். வளர்ந்தவுடன் கக்கூ தானாகவே ஆப்பிரிக்காவை விட்டு தாய்ப்பறவையின் இடத்திற்கு வந்து விடும் இந்த விந்தையான நிகழ்ச்சியினைப் பறவையினத்தில் பார்க்கும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது.

பறவைகள் ஞாபக சக்தியால் நிலத்தின் அடையாளங்களை அறிந்து கொண்டு செல்கின்றன என நம்பப்பட்டது. வேல்ஸ் (இங்கிலாந்து) நாட்டிலிருந்து ஒரு கடற்பறவை விமானம் மூலம் 5,500 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள போஸ்டன் நகருக்கு (அமெரிக்கா) அனுப்பப்பட்டது. அங்கு அது விடுவிக்கப்பட்டது. அப்பறவை 12 நாட்கள் கழித்துத் திரும்பவும் வேல்ஸ் நாட்டிற்கு வந்து விட்டது. பறவை விடுவிக்கப்பட்ட செய்தியைக் கொண்டு வந்த படகு ஒன்று பறவையைவிட பத்து மணி நேரம் தாமதமாக வேல்ஸ் நாட்டுக்கு வந்து சேர்ந்தது. ஆகவே பறவைகள் ஞாபக சக்தியால் வலசை செல்கின்றன என்ற கொள்கையும் மறுக்கப்பட்டது. மேலும் சில பறவைகள் இரவு நேரங்களில் குடிபெயர்ந்து செல்கின்றன. இரவு நேரங்களில் நிலத்தின் அடையாளங்களை அறிந்து செல்ல முடியாது.

சில பறவையியலார்கள் பூமியின் காந்த சக்தியை உணர்ந்து. அதன் துணை கொண்டு வலசை செல்கின்றன எனக் கருதுகின்றனர். சமீபத்தில் ஜெர்மனியில் ஓர் ஆய்வு நிகழ்த்தப்பட்டது. சில பறவைகள் குஞ்சுகளாக இருக்கும்போதே பிடிக்கப்பட்டு ஆய்வுக் கூடத்தில் அமைக்கப்பட்ட பெரிய கூண்டில் வளர்க்கப்பட்டன. மின் விளக்கு

களின் மூலம் பகலும், இரவும் கூண்டில் உண்டாக்கப்பட்டது. வலசை செல்லும் காலம் வந்ததும் பறவைகள் கூண்டிற்குள்ளாகவே பறக்க ஆரம்பித்தன. வலசை செல்லும் காலம் முடிந்ததும் பறப்பதும் நின்றது. வலசை செல்லும் காலத்தின்போது பறவைகளின் எடை அதிகரிக்கும். அதைப் போலவே கூண்டில் வளரும் பறவைகளின் எடையும் கூடியது. எனவே வலசை செல்லும் குணம் பரம்பரைப் பண்பாகும். (hereditary character) என்ற முடிவுக்கு ஆராய்ச்சியாளர்கள் வந்துள்ளனர்.

வேடந்தாங்கல் :

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கலுக்கு நவம்பர் டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் வடஆசியா, ஐரோப்பா போன்ற இடங்களிலிருந்து ஏராளமான பறவைகள் வருகின்றன. இங்குள்ள ஏரியில் பாரிங்டோனியா எனப்படும் ஒருவகை மரங்கள் வளர்ந்துள்ளன. அம்மரத்திலேயே பறவைகள் கூடுகட்டுகின்றன. பதினான்குக்கும் மேற்பட்ட பறவையினங்கள் உலகமுழுவதிலிருந்தும் இங்கு வருகின்றன. ஏரிமுழுவதும் நீர் நிறைந்திருக்கும் மழைக் காலத்தில் ஏறத்தாழ 5,000 லிருந்து 6,000 வரை பறவைகள் இங்குக் காணப்படுகின்றன.

இங்கு வரும் பறவைகளில் வெள்ளை, அரிவாள் மூக்கன், கரண்டிவாயன், நத்தை குத்தி நாரை, கூழைக்கடா, மணல் உள்ளான், சீழ்க்கைச் சிறகி (Sandpiper) ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

பறவைகள் தற்கொலை செய்து கொள்கின்றனவா?

அஸ்ஸாமில் கச்சார் (cachar) மாவட்டத்தில் ஜாடிங்கா என்ற சிற்றூர் உள்ளது.இவ்வூரில்பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில், பழங்குடியினர் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கை இரவு நேரத்தில் வெட்டவெளியில் வைத்து விடுகின்றனர். ஏராளமான பறவைகள் மந்திரத்தால் கட்டுண்டது போல் விளக்கின் முன் தானாகவே வந்து விழுகின்றன. வெளியிலே எடுத்துப் பறக்க விட்டாலும், அவை பறப்பதில்லை. மயக்கமுற்றது போல் கிடக்கும் அவைகளைத் தயாராகக் கம்புகளுடன் நிற்கும் பழங்குடியினர் அடித்து உணவுக்கு எடுத்துச் செல்கின்றனர். நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 200 பறவைகள் விளக்கின் முன் இவ்வாறு வந்து விழுகின்றன. மீன்

கொத்திகள் (King Fisher), பச்சைப் புருக்கள் (Green Pigeons) குளக் கொக்கு (Pond herons) ஆகிய பறவையினங்களே இவ்வாறு, கொல்லப்படுகின்றன. விழுந்த பறவைகள் மறுபடி பறந்து செல்வதே கிடையாது. இதுபோன்ற நிகழ்ச்சி உலகில் வேறு எங்கும் நிகழ்வ-தில்லை. அவ்விடத்தில் உள்ள காந்தப்பண்பின் மாற்றத்தினால்தான் பறவைகள் வந்து விழுகின்றன என்று சிலர் கருதுகின்றனர் ஆனாலும் இன்றும் இது ஒரு புரியாத புதிராகவே விளங்குகிறது.

வள்ளுவராண்டு 2012 மார்கழி 20-ஆம்நாள் (4—1—81) மதுரையில் தொடங்கிய

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டின்போது

திருவண்ணாமலை ஆதீனத் தமிழ்ப்புலவர், மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்

தமிழகப் புலவர்குழு உறுப்பினர்; தொல்காப்பியர் தமிழ் வளர்ச்சி மன்றப் புரவலர்

அன்பு. கருணையானந்தா வழங்கிய

இளைஞர் எழுச்சிப்பண்

நாடு வாழ்கவே! நாட்டு
மக்கள் வாழ்கவே !
நாட்டு நலனை நோக்கும் பெரியர்
நாளும் வாழ்கவே.

அதிபர் நாங்களே ! சேது
பதியர் நாங்களே !
மதியம் உரசும் பொதியம்ஆளும்
மன்னர் நாங்களே.

ஆத்திமாலை, வேம்புமாலை
அணிவம் நாங்களே;
ஆண்டு நூறு வாழ்பனந்தார்
அணிவம் நாங்களே.

வையை வாழ்மீன் வில்புலியை
வரைவம் நாங்களே;
மலைமு னிதொல் காப்பியரின்
மாண்பு ரைப்போமே.

மதுரை யாண்ட பாண்டிமன்னர்
எங்கள் மன்னரே!
வடபால் சோழ நாட்டு மன்னர்
எங்கள் மன்னரே!

சேரநாட்டு மன்னர் எங்கள்
மன்ன ராவரே;
தீரங்காட்டும் மன்னர் வாழ்வு
சேர்வம் நாங்களே.

பராவும் வேந்தர் பாண்டித்துரையார்
பண்பு வாழ்கவே!
உரோமா புரியும் உவந்து போற்றும்
முத்து வாழ்கவே!

எங்கள் கூட்டமே; நாட்டுக்
கிசைந்த கூட்டமே;
எங்கள் வேலையே, நாட்டை
உயர்த்தும் வேலையே.

அறிவி யலைத்தமிழ் மொழியில்
ஆக்கி வைப்போமே;
அவனி யெங்கும் அன்னைத்தமிழ்
அறியச் செய்வோமே.

சட்டமொழி தமிழே, என்று
சாற்ற வைப்போமே;
சட்ட மெலாம் தமிழினிலே
தழைக்கச் செய்வோமே.

தமிழகத்தில் அலுவ லெலாம்
தமிழில் மட்டுமே;
நடந்திடவே நல்ல சட்டம்
நாங்கள் செய்குவோம்.

உழவைப் போற்றுவோம், உண்மைத்
தொழிலைப் போற்றுவோம்;
உழைப்பை உறிஞ்சும் அட்டை மனிதர்
மனத்தை மாற்றுவோம்.

அன்னை யாளும் மன்றம் எங்கள்
பாராளு மன்றம்;

அங்கும் தமிழை ஒலிக்கசெய்யும்
ஆண்மை போற்றுவோம்.

வாய்மை போற்றுவோம்; செயலில்
தூய்மை போற்றுவோம்;
காய்த லின்றிக் கடமைகளைக்
கடிதே செய்குவோம்.

உலகை வெல்லுவோம் எங்கள்
உயர்வு சொல்லுவோம்.
தலைமை நிறைந்த புரட்சிச் செம்மல்
சால்பு புல்லுவோம்.

வாழ்க! வாழ்க!! வாழ்க!!! தமிழ்
வழங்கும் மீனாட்சி
வாழ்க! சங்கம் வாழ்க! விழா
வாழ்க! வையமே.

கல்கத்தா! ஓ! கல்கத்தா!!

—பழனி. அரங்கசாமி
மதுரைப் பல்கலைக்கழகம்

பிரெஞ்சு புகைப்பட நிபுணர் ஒருவர் சென்ற ஆண்டின் தொடக்கத்தில் இந்தியாவுக்கு வந்து தொலைக்காட்சி (TV) ஒன்றனுக்காக கல்கத்தா நகரினைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்தார். லண்டன் நகர தொலைக்காட்சி நிறுவனம் செய்திருந்த ஏற்பாடு அது. தாம் எடுத்த படத்திற்கு அந்த பிரெஞ்சுக்காரர் கொடுத்த தலைப்பே மேலே காணப்படும் கட்டுரையின் தலைப்புமாகும். படம் வெளியான பிறகுதான் இந்திய அரசினர் விழித்துக் கொண்டு அந்தத் தொலைக்காட்சிக்குத் தடை விதித்தார்கள். ஆனால் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும், அப்படம் தொலைக்காட்சியில் காட்டப்பட்டு விட்டது ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் கேத்தரின் மேயோ என்ற அமெரிக்கப் பெண்மணி 'மதர் இந்தியா' என்ற ஒரு நூல் எழுதினார். அந்த நூலில் கல்கத்தாவின் காளிகோவில் உயிர்ப்பலி தொடங்கி அந்நகரத்தின் அழுக்கும் சேரியும் சகதிகளுமே பக்கங்களை நிரப்பின. நூலினையே தடைசெய்ய வேண்டும் என்ற கூக்குரல் எழும்பியது. மகாத்மா காந்தி, வங்கக்கவி தாகூர் ஆகியோர் அந்நூலைக் கண்டனம் செய்தார்கள். இப்படி அன்று தொட்டு இன்று வரை பிரச்சனைக்குரியதான இந்நகரத்தை அண்மையில் கண்டு ஏறத்தாழ ஒரு மாத காலம் அங்குத் தங்கி இருந்தேன். எனது கருத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் சிறு முயற்சியே இப்பயணக் கட்டுரையாகும்.

கட்டுக்கு அடங்காத மக்கட் கூட்டத்தால் திணறிக் கொண்டிருக்கிற ஒரு நகரம் இந்தியாவில் உண்டென்றால், அதுதான் கல்கத்தா. பத்தாண்டுகளுக்குமுன் 65 லட்சமாக இருந்த மக்கள் தொகை இன்றைய நிலையில் ஒரு கோடி இருக்கலாம். மேற்கு வங்கத்தின் இந்தத் தலைநகரம் 1910-ஆம் ஆண்டு வரை இந்தியாவின் தலைநகராகவும். இருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் வெள்ளையராட்சிக்கு வித்திட்டது இங்குதான். அரவிந்தர் போன்ற ஞானிகளையும், சுபாஷ் போன்ற வீரர்களையும், தாகூரை-

யொத்த சுவிஞர்களையும் பெற்று வளர்த்துப் பேணியதும் இந்நகர்-தான். முதன் முதலாக செய்தித்தாள் அச்சிடப்பட்டதும், பல்கலைக் கழகம் ஏற்பட்டதும் கல்கத்தாவில்தான். ராணி விக்டோரியாவின் நினைவாக ஒரு மன்றமும், டல்கவுசியின் பெயரால் ஒரு சதுக்கமும் ஆங்கிலேயர் விட்டுச் சென்ற சின்னங்களில் சில. இருந்தாலும் இந்திய விடுதலைக்குப்பின்னர் பொதுவுடமைக் கட்சியினராலும் ஆளப்படுகின்ற இந்த மாநிலத்தில் எல்லாவிதமான பிரச்சனைகளும் உண்டு. கல்கத்தா நகரமே இதற்குச் சான்று. சென்னையில் ஏறும்போதே என்னைப் பலர் எச்சரித்தார்கள். கல்கத்தாவை நெருங்கும்போது நகரப் பேருந்தில் சிறிய சூட்கேசை வைத்துக் கொண்டுகூட நீங்கள் பயணம் செய்ய முடியாது என்றார்கள் ஹௌரா புகைவண்டி நிலையத்தில் இறங்கி கல்கத்தாவில் காலடி எடுத்து வைத்ததும் இன்னொரு உண்மையும் தெளிவாயிற்று. கையில் பெட்டி இல்லாமலிருந்தாலும், பஸ்ஸில் ஏற முடியாது என்பது தான் அது.

பஸ்ஸில் ஏறுவதும் இறங்குவதும் இங்கு ஒரு கலை. மூச்சுத் திணறி விழி பிதுங்காமல் தப்பித்து குறைந்தது ஒரு மாதமாவது அந்தக் கலையில் பயிற்சி பெற்றால், பஸ்ஸில் ஏறுவது பற்றி எண்ணிப் பார்க்கலாம். ஐம்பது பேர் பயணஞ் செய்யத்தகும் அந்தப் பேருந்து-களில் நூற்றைந்து பேருக்குமேல் அடைத்துக் கொண்டு போகிறார்கள். மூச்சுவிட இடமில்லை. கூட்டத்தைப் பார்த்துப் பயந்து பஸ்ஸில் ஏறாமலே அண்மையில் உள்ள சில பகுதிகளுக்கு நான் நடந்தே சென்றேன். ஆண்களோடு பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு முண்டியடித்து நின்று கொண்டே செல்கிறார்கள். மோட்டார் வாகன விதிகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டார்கள். காலை 8 மணி தொடங்கி 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும் அப்பெரு நகரத்தின் எல்லாத் தடங்களிலும் இப்படித்தான். சில பகுதிகளில் மினி பஸ், தனிப் பேருந்து ஆகியன இருந்தும், கட்டணம் சற்று அதிகம் என்பதால் கூட்டம் அங்கு போவதில்லை.

பேருந்துகளுக்கு அடுத்து டிராம்களிலும் இதே நிலைதான். தட தட வென்று ஆமைவேகத்தில் ஊர்ந்து செல்கின்ற இந்த டிராம்-களுக்குப் பொறுமை அதிகம். அண்மையில் நூற்றாண்டு விழா

நடத்தியிருக்கும் டிராம்களை விட அதில் வரும் கண்டக்டர்களுக்கு அதிகப் பொறுமை பயணச் சீட்டு வாங்கினீர்களா என்று கூடக் கேட்காமல் ஒவ்வொருவரிடமும் யாசகம் வாங்குவது போலக் கையை நீட்டுகிறார். பழகிப்போன இளசுகள் முறைத்துப் பார்த்துத் தலையை ஆட்டுகின்றன. கண்டக்டர் நகர்ந்து விடுகிறார். 'அரசினர் நடத்தும் டிராம் கம்பெனிஎக்கேடும் கெட்டுப் போகட்டும். எனக்கென்ன' என்பது போல் தெரிகிறது, மனச்சான்றின்படி உழைப்போம் என்று பாடு-பட்டால், உதை யார் வாங்குவது? டிராம்தான் ஓட முடியுமா? சிறு தகராறுகளுக்கெல்லாம் டிராம்களை நிறுத்தி விடுகிறார்கள், அது கூடப் பரவாயில்லை. கல்கத்தாவில் பிப்ரவரி மாத முதல் மூன்று வார காலத்திற்குள் பயணக் கட்டண உயர்வை எதிர்த்து இரண்டு டிராம்களும், மூன்று பேருந்துகளும் எரிக்கப்பட்டுள்ளன. எந்தப் போராட்டமும் இன்றி, அரசியல் கொந்தளிப்பு இல்லாமல் கல்கத்தா நகர வாழ்க்கை மாமூலாக இருக்கிறது என்று கூறப்படும் இந்த நாட்களிலேயே இந்தக்கதி என்றால், நக்சலைட்டுகள் கைஓங்கியிருந்த காலத்தில் எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பார்க்கவே முடியவில்லை,

இந்தத் தொல்லையெல்லாம் வேண்டாம் என்று வாடகை டாக்ஸியில் செல்ல எண்ணினால், தும்பை விட்டு வாலைப் பிடித்த கதையாகி விடும். மீட்டரைப் பார்த்துப் பணம் கொடுத்தால் டாக்ஸி டிரைவர் பணம் வாங்க மாட்டான். ஹௌரா ரயில் நிலையத்திலும், டம்டம் விமான நிலையத்திலும் டாக்ஸிக்காரர்களின் தொல்லையை அடக்க முடியவில்லை என்று போலீஸாரே ஒத்துக் கொள்வதாக 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகை கூறுகிறது. ஒருவரை ஏற்றி உட்கார வைத்து விட்டு. அதே திசையில் போகிற இன்னும் மூவரையும் அமர்த்திக் கொண்டு ஒவ்வொருவரிடம் மீட்டர்படி தனித்தனியே பணம் வசூலிப்பதும், அறியாதவர் வந்தால் ஊரைச் சுற்றி இழுத்தடித்துப் பணம் பறிப்பதும், இரவு நேரங்களில் வருவோரிடம் முடிந்தால் கொள்ளையடிப்பதும் இவர்கள் பழக்கம். "நாங்கள் என்ன செய்வது? பீகாரிகளும், பஞ்சாபியரும் தான் டாக்ஸி ஓட்டுகிறார்கள், சட்டமும் ஒழுங்கும் இவர்களாலேயே கெட்டு விட்டது" —இது வங்காளியரின் கூற்று. ஆயின் போலீசார் என்ன செய்கிறார்கள் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? எந்தச் சிக்கலிலும் அவர்கள் தலையிடுவதில்லை அவர்களின் தலையிடாக் கொள்கைக்கு இன்னும் ஒரு சான்று.

சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து போவதும், குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்துப் போவதுமான பணியை ரிக்ஷாக்கள் செய்கின்றன. மனிதர் இழுக்கும் இந்த ரிக்ஷாக்களைத் தடை செய்ய எண்ணுகிறது அரசு. அதற்குரிய உரிமம் (லைசென்ஸ்) இப்போது வழங்கப்படுவதில்லை. காவல் துறையினரின் பதிவு பெற்றவை ஆறாயிரம் ஆனால் உண்மையில் அரை லட்சம் ரிக்ஷாக்களுக்கு மேல் ஓடுகின்றனவாம். சட்டத்தில் போதிய வலிவின்மையால் வழக்குப்போடமுடியவில்லை என்பது போலீசின் பதில். கார்களும், லாரிகளும். பேருந்துகளும் நகர் முழுதும் வெளித்தள்ளுகின்ற கரும்புகை ஒரு புறம். பரவலாக இருக்கின்ற தொழிற்சாலைகளின் புகைபோக்கிகள் மறுபுறம். எங்கு பார்த்தாலும் நகரம் முழுவதும் லேசான மூடுபனி இருப்பது போல புகையும் தூசியுமாகவே இருக்கிறது. பளிச்சென்று சுத்தமான நடைபாதைகளையும் அழகான தெருக்களையும் பார்க்க முடியவில்லை. சித்தரஞ்சன் அவென்யூ என்பது மிக நீளமான கடைத்தெரு காலை 11. மணியளவிலும் இரு புறமும் உள்ள நடை பாதைகளில் வேலையாட்கள் படுத்துக் கிடக்கிறார்கள். குடும்பங்கள் தெருவிலேயே வாழ்கின்றன. பூமிக்கு அடியில் உள்ள குடி நீர்க்குழாய் ஒன்று உடைத்துக் கொண்டோ, உடைக்கப்பட்டோ தண்ணீரை மேல் நோக்கிக் கொப்பளிக்கிறது. அதில் ஓரிருவர் சோப்புக் போட்டுக் குளிக்கிறார்கள். ஒருவன் துணி துவைக்கிறான். பாதையோரட கடைக்காரன் பெரிய வாணலியில் அந்த நீரை எடுத்து கடலைமாவு பிசைகிறான். இந்த மாதிரிக் காட்சியினை நெருக்கடி மிகுந்த இந்நகரத்துக் கடைத் தெருக்களில் பரவலாகக் காண முடிகிறது.

பாதையோரத்திலேயே வருடக் கணக்கில் வாழ்கின்ற குடும்பங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. தற்போது எடுக்கப்படுகிற மக்கள் தொகைக் கணிப்பில் இவர்களையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்று மேற்கு வங்க அரசு திட்டமிட்டிருக்கிறது பம்பாய், சென்னை போன்ற நகரங்களை விட கல்கத்தாவில் தான் ஏழைக்கும் பணக்காரனுக்கும் உள்ள இடைவெளி அதிகம் என்பது என்னுடைய கணிப்பு. நக்சலைட் இயக்கம் தோன்றுவதற்கும் இதுவே காரணம் என்று கூடச் சொல்லாம். நான் தங்கியிருந்த பகுதியில் அன்றாடம் பிச்சை எடுக்கின்ற குடும்பம் ஒன்று தெருவில் வாழ்கிறது. அங்கேயே ஆடம்பரமான பத்துமாடிக் கட்டிடம் ஒன்றிலிருந்து லிப்டில் இறங்கி வந்து கோல்ப் விளையாட தனது இரண்டு

குழந்தைகளைக் காரில் அழைத்துச் செல்கிறார் ஒரு செல்வந்தர். சமுதாயத்தின் இடைவெளி எப்படி இருக்கிறது பார்த்தீர்களா! உடல் உரமுள்ளோர் வேலை செய்து பிழைத்துக் கொள்ளுகின்றனர் வயது வந்தோர் ஒன்றும் செய்ய முடியாமல், உதவியும் இன்றிப் புறக்கணிக்கப்படுகிறார்கள். வாய்ப்பும், வசதியும் இருந்தால், பந்தமும் பாசமும் வளர்கின்றன. நித்திய தரித்திரனுக்கு வாழ்க்கையே போராட்டமாகின்ற போது, நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்ற கிழடுகளை எப்படிப் பார்க்க முடியும்? யார் கவனிப்பது? பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நடைபாதைகளில் செத்துக் கொண்டிருப்போரும், பிணமாகக் கிடப்போரும் அங்குமிங்குமாகக் காணப்படுவது உண்டாம் சமூகத்தின் இந்த அவலநிலையைப் போக்குவதற்கு நம்மாலான தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒரே ஒருவருக்குத்தான் தோன்றியிருக்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் வாழும் அந்நகரத்தில் வயது முதிர்ச்சியாலும், நோயினாலும், பட்டினியாலும் நலிந்தும், மெலிந்தும் பாதையோரங்களில் செத்துக் கிடந்தாலும், அவற்றை யாரும் பார்ப்பது இல்லை. பேருந்து நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள், தெருமுனைகள், சந்து பொந்துகளில் எல்லாம் திரிந்து கொண்டிருந்த ஏழைச் சிறுவர்களின் இழிந்த நிலையும் யார் கண்ணிலும் படவில்லை ஒட்டி உலர்ந்த வயிற்றுக்கு உணவு கிடைக்காமல், பிறர் பொருளை எடுக்கும் போது திருட்டுப் பட்டம் கட்டியதோடு சரி. மருத்துவ மனைகளிலும், குப்பைத் தொட்டிகளிலும் உயிரோடு தூக்கி எறியப்பட்ட பச்சிளங்குழந்தைகள் ஏராளம். வரலாற்றுப் புகழ் பொருந்திய கல்கத்தா மாநகரத்தின் கறைபடிந்த, இந்த நிலையினைப போக்குகின்ற எண்ணமும் உறுதியும் ஒரே ஒருவருக்குத்தான் ஏற்பட்டது.

அவரோ ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியை. அரசினரும், பொது நிறுவனங்களும் ஏற்க வேண்டிய இப்பெரிய சுமையினைத் தான் ஏற்றுச் செயல்புரிய முடியுமா என்றெல்லாம் அந்த அம்மையார் எண்ணிப் பார்க்கவில்லை. இதயத்தில் அன்பும், உள்ளத்தில் உறுதியுமே அவர்தம் சொத்து. ஆடம்பரமான சூழ்நிலை, பள்ளிக் குழந்தைகளின் பாசம், பயிற்றுவிப்பதின் இன்பம் இவை பற்றியெல்லாம் கவலைப்படாமல், செய்து வந்த அந்தப் பணியினை ஒதுக்கிச் சேரிகளை நோக்கி நடந்தார். முப்பதாண்டுகளுக்கு முன்னால் தொடங்கிய அன்னை தெரசாவின் இந்த ஆன்மீக, மனித சமுதாயப்

பணி இன்று வரை நடந்து கொண்டுள்ளது. தூய்மையான விரிந்து பரந்த அவரது தொண்டுள்ளத்தை இன்று உலகமே பாராட்டுகிறது. நோபெல் பரிசு உள்ளிட்ட பல்வேறு பரிசுகளும் பாராட்டுகளும் குவிகின்றன. விமானக் கட்டணம் ஏதுமின்றி உலக மெங்கும் பறந்து சென்று பணிபுரியஇந்திய அரசினர் அவருக்கு அனுமதி அளித்துள்ளனர்.

லோயர் சர்க்குலர் சாலையில் அன்னை தெரசாவின் தலைமையகத்தையும், நான்கைந்து கட்டிடங்களுக்கு அப்பால் 'நிர்மலா சிசு பவனம்' என்ற குழந்தைகள் காப்பகத்தையும் நேரில் சென்று கண்டேன். அன்னை தெரசா அப்போது பம்பாயில் இருப்பதாகச் சொன்னார்கள். குழந்தைகள் காப்பகத்தில் ஒரு மாடியில் நீளமான அறை. இருபுறமும் நாற்பது தொட்டில்கள் இருக்கும். ஒவ்வொன்றிலும் ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள். இரண்டு மூன்று கன்னிமார் மிக்க கவனமுடன் துணிகளை மாற்றுவதும், புட்டிப் பால் புகட்டுவதுமாக இருந்தார்கள். டெட்டால் துணியினால் தரையினை ஒருவர் துடைத்துக் கொண்டிருந்தார். புகைப்படக்காரரையும், என்னையும் நோக்கி ஒரு பெண் துறவியார் ஒரு குழந்தையைக் கையில் எடுத்து வந்து 'இந்தக் குழந்தைக்கு என்ன வயது என்று சொல்ல முடியுமா' என்று கேட்டார்கள். நான் உற்றுப் பார்த்தேன். அம்மையாரின் கையில் மயங்கித் துவண்டு கிடந்தது, அந்தப் பெண் குழந்தை. 'ஒன்றரை வயதுக்கு மேல்' என்று நான் முடிப்பதற்குள் "இந்தக் குழந்தைக்கு ஐந்து வயதாகிறது. சத்துணவும், தாய்ப்பாலும் இன்றி இப்படி வாடி வதங்கி வளர்ச்சி குன்றியிருக்கிறது" என்று விளக்கம் கொடுத்தார்கள். பெற்றோரிருந்தால், திரும்பவும் வந்து குழந்தையினைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். குழந்தையில்லாதார் சிலரும் சுவீகாரமாகக் குழந்தைகளை எடுத்துச் செல்லுகின்றனர்.

காளி கோவிலுக்கு அருகில் உள்ள 'நிர்மல் இருதய இல்லம்' அநாதையாகக் கிடக்கும் வயது முதிர்ந்தோருக்குப் புகலிடம் அளிக்கிறது. இயன்ற அளவு மருத்துவ உதவியும் அளிக்கப்படுகிறது. உயிர் பிழைத்தால், சியால்டா ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள 'பிரேம் தான்' என்ற விடுதிக்கு அனுப்பப்படுவர். இல்லையாயின் அவரவருக்குஉரிய மதச்சடங்குகளுடன் அடக்கம் செய்யப்படுகின்றனர். மாந்தருக்குள் ஒரு தெய்வமெனத் திகழும் தெரசா அன்னையின் இத் தொண்டு உள்ளத்தைப் பாராட்டாதவர் இல்லை. தூய்மையான கத்தோலிக்கத் துறவியான இவர் இற்றைக் காலத்தில் பல்வேறு நாடுகளில் சட்டரீதியாக அனுமதிக்கப்படுகின்ற கருச்சிதைவினைக் கண்டிக்கத் தயங்குவதில்லை. "புறக்கணிக்கப்படும் குழந்தைகளை (unwanted child) நான் வளர்க்கிறேன் கருச்சிதைவு (abortion) என்பது கொலைக்குச் சமம்" என்பதே அவர் அடிக்கடி கூறுவதாகும்.

ஒன்றும் அறியாத அநாதைகளை கத்தோலிக்க மதத்திற்கு அன்னை தெரசா மாற்றி விடுகிறார் என்று சிலர் கண்டிக்கின்றனர். இந்த அம்மையார் மதமாற்றம் செய்வதில் குறிக்கோள் உடையவராக எனக்குப் படவில்லை. கல்கத்தாவில் இந்துக்களுக்கு இருக்கும் ஆழ்ந்த மதப்பற்றினை யாராலும் மாற்ற முடியாது என்பதை சரஸ்வதி பூஜையின்போது நானே நேரில் கண்டேன். பொதுமக்களுக்கு இருக்கும் இறைமைப் பற்றினை கடவுட் கொள்கைக்கு எதிரான கம்யூனிஸ்டுகளாலேயே ஒன்றும் செய்யமுடியவில்லை. 'வசந்த பஞ்சமி' என்று அழைக்கப்படும் இந்த பூஜைக்கு என்றே கடைத் தெருக்கள் தோறும் ஏராளமான சரசுவதி பொம்மைகள் விற்கப்படுகின்றன. வெள்ளை வெளேரென்று ஆறடி உருவ பொம்மைகளுக்குப் புடவையினைக் கட்டி அலங்கரித்து, கூந்தல் தோளில் புரள வீணையினைக் கையில் வைத்துக் கொண்டு அருள் கனிய நோக்கும் அந்த அழகான உருவங்கள் இன்றும் என் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. வீடுகளின் உட்கூடங்களை எல்லாம் திரைச் சீலைகள் கட்டி கோவில் கர்ப்பகிருகம் போல மாற்றி வழிபாடு செய்கின்றனர். இரவு பூராவும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் நல்லுடை அணிந்து கலகலப்பாக வழிபாடு செய்யச் செல்லுகின்றனர். இசைக் கச்சேரிகளும் சொற்பொழிவுகளும் நடக்கின்றன. விழா முடிந்து, மறுநாள் மாலையில் எல்லா விக்கிரகங்களையும் கூக்ளி ஆற்றில் போட்டு விடுகின்றனர். இந்த ஆண்டு மட்டும் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட படிமங்கள் ஆற்றில் விடப்பட்டன. லாரிகளிலும், வண்டிகளிலும் ஆறுநோக்கி ஒரே நேரத்தில் இவற்றை எடுத்துச் செல்வதனால் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்க்க போலீசார் நகரின் கீழ்ப்புறப் போக்குவரத்தினை ஒரு வழிப்படுத்தினர். காளி வழிபாடு இந்நகரில் இன்னும் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்று கூறப்படுகிறது. இத்தகைய வழிபாடுகளில் பிற மதத்தினரும் கூடக் கலந்து கொள்வது உண்டு என்று கேள்விப்பட்டேன்.

அயல் நாட்டினரும் பிற மதத்தினரும் குறிப்பிடத்தக்க அளவு இங்குக் காணப்படவில்லை. இந்துமதத் தொடர்பான இடங்களே மிகுதி. இதை எழுதும்போது எஸ்பிளனேட் பகுதியில் வேடிக்கையான காட்சி ஒன்று நினைவுக்கு வருகிறது. இருபது பேர் இருக்கலாம். ஓரிருவரைத் தவிர அனைவரும் அமெரிக்கர்கள் தலையை மழுங்க மொட்டை அடித்திருந்தாலும் உச்சியில் மிகச்சிறிய குடுமி

நெற்றியில் நாமம். மேல் சட்டை இல்லை. சிலர் பழுப்புநிற ஜிப்பாவும் பஞ்ச கச்சமும் அணிந்துள்ளனர். பஜனை பாடிக் கொண்டே செல்கிறார்கள். ஊர்வலத்தின் முன்னால் பாட்டுக்கேற்ற கைத்தாளம் போட்டுக் கொண்டு குதித்துக் குதித்து ஆடிக்கொண்டே இரண்டு மூன்று பேர். இந்தக் காட்சியை கடைத்தெருவில் அனைவரும் ரசித்தார்கள். 'ஹரே கிருஷ்ண' இயக்கத்தைச் சார்ந்த இந்த அமெரிக்கர்கள் அடிக்கடி இப்படி பஜனை செய்வது உண்டு என்று அறிந்தேன்.

வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகங்கள் அனைத்தும் டில்லியில் இருந்தாலும், அயல்நாட்டு வணிக, கலாச்சாரப் பிரதிநிதிகள் இங்கும் உள்ளனர். தேசிய நூலகச் சாலையில் நேபாளத் தூதுவர் (Consul General) அலுவலகம் உள்ளது. நமக்கு எல்லைப்புற நாடு என்பது மட்டுமன்றி இந்தியாவோடு பழங்கால முதல் மதம் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றால் நெருங்கிய தொடர்பு கொண்ட நாடு நேபாளம். தமிழோடு ஒத்த தொன்மையுடையதாகக் கருதப்படும் வடமொழிக்கு ஒரு தனிப் பல்கலைக் கழகமே இந்நாட்டில் உள்ளது. இந்நாட்டின் தூதுவரைக் காண்பதற்கு முன் அனுமதி பெற்று ஒரு நாள் காலை 11 மணியளவில் அவர்களின் அலுவலகத்திற்குச் சென்றேன். வரவேற்பு அறையில் அமரச் சொன்னார்கள். அழகான அந்த அறையில் சிற்சில நாளிதழ்களும், வார, மாத இதழ்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. 11-40 அளவில் ஒரு அலுவலர் என்னை உள்ளே அழைத்துச் சென்றார். முகம்மலர, அகங்குளிர எழுந்து நின்று கைகுலுக்கி வரவேற்றார், நேபாளத் தூதுவர். இனிமையான அந்த வரவேற்பும், அவர் காட்டிய அன்பும் நீங்கா நினைவுகளாகி விட்டன.

''செய்திகளைச் சிதைத்தும் திரித்தும் வெளியிடுகின்ற சராசரி பத்திரிகையாளனாகக் கருதி விடாமல் என்னிடம் மனம் விட்டுப் பேசலாம்'' என்றேன். புன்முறுவலுடன் ''மிக்க மகிழ்ச்சி'' என்ற பதில் ரத்தினச் சுருக்கமாக வந்தது.

''இந்தியாவும், நேபாளமும் அரசியல் ரீதியாக வெவ்வேறு நாடுகள்; என்றாலும் உணர்வாலும் கொள்கையாலும் நமது இரு நாடுகளும் ஒன்றுதான். ''அத்தோடு இந்துமதத்தைச் சார்ந்த ஒருவர்

அரசராக மட்டுமன்றி, இந்து மதமே நேபாள அரசால் அங்கீகரிக்கப்பட்டதாகவும் இருப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது' —இது நான். "ஆம்! ஆக்கிரமிப்பும், யுத்த வெறியும் நிறைந்திருக்கின்ற இந்தஉலகில் இந்தியாவின் நட்புறவு பற்றிய அச்சமோ, ஐயமோ எங்களுக்கே எந்தக் காலத்திலும் ஏற்பட்டதில்லை"—அவர் குரலில் தொனித்த உறுதியும் தெளிவும் நமது நாட்டின்பால் நேபாளிகள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையும் பாசமும் பற்றும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

தூதுவராகப் பணிபுரியும் திரு. டாக்டர் மதுசூதன் லோகானி இதற்கு முன் ஸ்விட்ஸர்லாந்தில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர். வாக்கு வன்மையும், ஆழ்ந்த கல்வியறிவும் கூர்ந்த மதியும் கொண்ட இவருக்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்றே கூறலாம். மனம் விட்டு இருவரும் பேசத் தொடங்கினோம். தானும், தனது குடும்பத்தினரும் வேலூருக்கு வந்து பின் காரிலேயே மதுரை, ராமேசுவரம் ஆகிய இடங்களுக்குத் தல யாத்திரை வந்ததை நினைவுபடுத்திக் கொண்டார். குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அரசின் நிலை, பதட்டமான உலகச் சூழ்நிலையில் நடுநிலை நாடுகளின் பங்கு, மக்களாட்சியில் பல்வேறு அரசியல் கட்சிகளின் நியாயமான பணி ஆகியவற்றில் எங்கள் இருவரது கருத்தும் ஒன்றாக இருந்தது பற்றி அவர் மிகவும் மகிழ்ந்தார். நான் கேள்விகளைத் தொடர்ந்தேன்.

"கொய்ராலாவின் அண்மைக் காலத்திய நிலை என்ன?"

"கொடுக்கப்பட்டிருக்கும் ஜனநாயக உரிமைகள் போதாது; இன்னும் வேண்டும் என்பதே அவர் கட்சியின் வாதம்"

கொய்ராலாவின் கட்சி நேப்பாளத்தில் இப்போது தடை செய்யப்பட்டுள்ளது. டில்லியிலிருந்து கொண்டு நேப்பாள எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து வருகிறார் இவர். இந்திய அரசு கொய்ராலாவிற்கு எந்தவித உதவியும் கொடுப்பதில்லை என்பது பற்றித் தூதுவர் மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டார்.

"அரசியல் கட்சிகளுக்குச் சட்ட ரீதியான உரிமைகள் அதிகமாகக் கொடுக்கப்படும்போது, அவற்றினால் நன்மைகளை விடத் தீமைகளே விளைகின்றன. பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தனிப்-

பட்ட விரோதத்தினால் தம்முள் மாறுபட்டு நிற்கும்போது நாட்டின் பொது நலம் மறக்கப்படுகிறது. இது போன்ற குழப்பமான சூழ்நிலையில் பிற ஆக்கிரமிப்புச் சக்திகள் உள்ளே நுழைய வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. இன்றைய ஆப்கானிஸ்தானமும், கம்பூச்சியாவும் நமக்குத்தரும் படிப்பினை இதுவே. எல்லைப்புறத்தில் சிறு நாடாகிய நேபாளத்திற்கு அப்படியொரு இக்காட்டான நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதே எனது கவலை'' என்று நான் சரளமாகச் சொல்லிமுடித்ததன், முழுமனதுடன் நன்றி கூறினார்.

நேப்பாளத்தில் உள்ள திரிசூலி நீர்மின்திட்டம் முழுவதும் இந்திய அரசின நிதி உதவியோடு ஏற்படுத்தப்பட்டது. கர்னாலி ஆற்றில் இனித் தொடங்கவிருக்கும் திட்டத்தினால் மின்விசையினை நமது நாடும் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

"பாடத்திட்டத்தில் மொழிப்பிரச்னை ஏதும் ....."

நான் வினாவினை முடிப்பதற்குள் பதில் வருகிறது.

'ஆங்கிலமும் நேபாளி மொழியும் தொடக்கநிலையிலிருந்தே கற்றுத்தரப்படுகின்றன. வடமொழி உயர்நிலைப்பள்ளியிலிருந்து துவக்கபபடுகிறது.''

மும்மொழித் திட்டம் நமது நாட்டில் ஏட்டளவில்தான் இருக்கிறது. அது செயற்படுத்தப்படுகின்ற நேபாளத்தில் மொழிப் பிரச்சினை இல்லை என்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. கல்கத்தாவில் இருக்கும் 15 ஆயிரம் நேப்பாளிகளின் நலனில் அக்கறை கொண்டவரும், மிக்க அலுவல்கள் நிறைந்தவரும் ஆகிய ஒரு வெளிநாட்டுத் தூதுவரிடம் இவ்வாறு ஏறத்தாழ ஒருமணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தது எனக்கு ஒரு பெரும் சாதனையாகத் தோன்றியது.

தொடர்ந்து தன்னோடு கடிதத் தொடர்பு வைத்துக்கொள்ளுமாறு கூறித் தனது முகவரி அட்டையினைக் கொடுத்து அன்புடன் விடை தந்து அனுப்பினார் திரு லோகானி அவர்கள். உளம் நிறைந்த மகிழ்வோடு நான் வெளியில் வரும்போது மதியம் மணி 12-30. காலை பத்து மணி வரை கல்கத்தா நகரைக் கவ்விக் கொண்டிருந்த பனி மூட்டம் விலகிப் பளிச் சென்று வெயில் அடித்தது.

(தொடரும்)

"கற்றறிதல் - ஒன்றா? இரண்டா?"

சென்ற இதழ்த் தொடர்ச்சி

வை. தங்கமணி
தமிழாசிரியர், திருமங்கலம்

இனி, கற்றலையும் அறிநலையும் இரண்டாக எண்ணியதற்குத் துணைநிற்கும் அகச் சான்றினையும் புறச் சான்றினையும் பார்ப்போம்.

கற்றல் எல்லோருக்கும் எளிது. ஆனால், ஆன்றவிதந் சான்றோனாய் ஆவது அரிது இதனை வள்ளுவரே,

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு." (355)

"ஈண்டு மெய்ப்பொருள் காண்பது அறிவு என்னும் தொடருக்குப் பரிமேலழகர், "பொருள் தோறும் உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து நின்ற உண்மையைக் காண்பது எனறவாறாயிற்று" என்றும்,

"கோச் சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரல் இரும்-பொறை" என்றவழி: அரசன் வேழ நோக்கினை உடையான் என்பதொரு வடிவும், 'சேய்' என்பதொரு இயற் பெயரும், 'மாந்தரஞ் சேரல் இரும்பொறை' என்பதொரு சிறப்புப் பெயரும் ஒரு பொருளின்கண் கற்பனை யாகலின் அவ்வாறு உணராது, நிலம் முதல் உயிர் ஈறாகிய தத்துவங்களின் தொகுதி என உணர்ந்து அவற்றை நிலம் முதலாகத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக் கொண்டு சென்றால் காரண காரியங்கள் இரண்டும் இன்றி முடிவாய் நிற்பதனை உணர்த்தலாம்" என்று விளக்கம் தருகிறார்.

இதனால் 'உலகத்தார் கற்பித்துக் கூறும் கற்பனைகள் நீக்கி உண்மையான கருத்தினைக் கண்டுபிடிப்பதே அறிவின் வேலை என்று கூறுகிறார்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி."

—என்ற 356 ஆம்

பாடலுக்கு உரைவிளக்கம் தரும்போது, 'கற்று' என்றலினால் 'பலர் பக்கலினும் பலகாலம் பயிறல்' என்றும், வாராநெறியாம் வீட்டிற்கு நிமித்தக் காரணமாய முதற் பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று அவை கேள்வி, விமரிசனம், பாவனை என்பன. அவற்றுள் கேள்வி இதனால் கூறப்பட்டது என்பதோடு அனுபவமுடைய தேசிகர்பால் கேட்டு அதனால் மெய்ப்பொருளை உணர்ந்தவர்'' என்றும் கூறுகிறார்.

இங்கும் கற்றல் வேறு; மெய்ப்பொருளை உணர்ந்தவர் வேறு என்றும் வேறுபாடு காட்டுகிறார்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' — என்ற 391-ஆம்

'கற்பவை' என்றதனால் அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள் உணர்த்துவனக் கற்க வேண்டும் என்றும், 'மெய்ப் பொருளாவது' நல்லோர் பலருடனும் 'பலகாலம் பயிறல்' என்றும் அவரே கூறுகிறார்.

கல்விக்குச் சிறப்புத்தர வேண்டுமெனில் கற்றவழி நிற்றலேயன்றிப் பிறிதுண்டோ? மெய்ப்பொருளை நல்லோர் மாட்டுப் பலகாலும் பயிறல் என்றால் கற்றோரிடமா? நல்லோரிடமா? ஏன் கற்றோர் என்னாது நல்லோர் என்றார்? இதிலிருந்து இரண்டிற்கும் வேறுபாடு பரிமேலழகரே காட்டுகிறார் என்பது தெளிவு.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.'

— என்னும் 396-ஆம்

பாடலில், 'மாந்தர்க்கு அறிவு கற்றனைத்தூறும்' என்ற தொடருக்கு மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும் என்றுதானே கூறுகிறார். இதிலும் வள்ளுவர் கூறும் கற்றலையும் கற்றலினால் வரும் அறிவினையும் ஒன்று என்று இணைத்திட முடிந்ததா? இல்லையே!

'கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.' — என்னும் 404-ஆம்

பாடலில் 'ஒண்மை' என்பதற்கு அவரே 'அறிவுடைமை' என்று கூறுகிறார். இதிலும் கற்றல் வேறு—அறிவு வேறு என்று காட்டுகிறார் அல்லவா?

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.' — என்னும் 423-ஆம்

பாடலில் நுண்பொருளைக் காண்பது அறிவின் வேலை என்பது தெளிவாக்கப்படுகிறது.

"குணங்கள் மூன்று மாறிமாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப் பொருள் பகைவர் வாயினும், கெடு பொருள் நட்டார் வாயினும் ஒரோவழிக் கேட்கப்படுதலான் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்றார். மேலும், சொல்வாரது இயல்பு நோக்காது அப்பொருளின் பயன் நோக்கிக் கொள்ளுதலும், அப்பொருளின் மெய்யான பயனைக் காணவல்லதுதான் அறிவு என்றும் அறிவின் வேலையினை விளக்குகிறார்.

'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையார் பேதையார் இல்' — என்னும் 834-ஆம்

பாடலிலும் ஓதுதல் வேறு, உணர்தல் வேறு என்பன தெள்ளத் தெளிய உணர்த்தி இருப்பதனை நன்குணர்ந்த பரிமேலழகர் ஏன் கற்றலையும் அறிதலையும் வெவ்வேறாகக் கொள்ளவில்லை?

மேலே கூறிய எடுத்துக் காட்டுகளுடன் சுமார் முப்பது இடங்களுக்கு மேலாகக் கற்றல் வேறு உணர்தல் அல்லது அறிதல் வேறு என்பதனைச் சுட்டிச் செல்கிறார் வள்ளுவர்.

பரிமேலழகரும் 'வன்கண்' எனத் தொடங்கும் குறளினைத் தவிர ஏனை அனைத்துப் பாக்களுக்கும் வள்ளுவரைச் சார்ந்தே பொருளும் விளக்கமும் தருகிறார்.

இனி, கற்றல் பற்றியும், அறிதல் பற்றியும் பிறநூல் கூறுவன வற்றைக் காண்போம்.

நாலடியாரில்:-

'கரும வரிசையால் கல்லாதார் பின்னும்
பெருமை உடையாரும் சேறல்-அருமரபின்
ஓதம் அரற்றும் ஒலிகடல் தண்சேர்ப்ப
பேதைமை அற்றது அறிவு.' (249)

இங்குத் தொழில் முறைமையால் கல்வி அறிவும் இல்லாத மூடரைக் கற்றலும் அதனால் ஏற்படும் அறிவும் உடைய அறிஞர் ஒழுகுதல் இழிந்தது அல்ல—அறிவுடைமையே யாகும் என்பது கருத்து.

'பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிப்பட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளியநூல்—மற்றும்
முறிபுரை மேனியர் உள்ளம்போல் யாவர்க்கும்
அறிதற் கரிய பொருள்'— (317)

ஈங்குக் கொடுப்பவரை மனத்துட் கொள்ளாமல் தாம் பெறுகின்ற விலைப் பொருளையே கருத்தாகக் கொள்ளும் பொதுமகளிரின் தோள்கள் பலருக்கு எளியவாதல் போல ஒரு தொடர்புற்றுக் கற்பவர் எல்லோருக்கும் நூலின் பொதுக் கருத்துக்கள் எளியவாய் விளங்கும். ஆனால், மாந்தளிர் போன்ற மேனியை உடைய அவ்விலை மகளிரின் மனம் யாவர்க்கும் அறிதல், யாவர்க்கும் அரியவாதல் போல நூலின் உட்பொருட்கள் எல்லார்க்கும் அறிதல் அரியனவாகும்.

இப்பாடலில் கற்றல் எளியது என்றும், கற்றலினால் நூலின் பொதுக் கருத்துதான் அறிய இயலும் என்றும், அதில் இலைமறை காய்போல் மறைந்து கிடக்கும் உட்பொருள் அறிதல் இயலாது என்றும், அதன் உட்பொருள் உணரும் ஆற்றல், அறிதல் தன்மை உடைய அறிவுடையோரால் தான் முடியும் என்பதும் விளக்கப்படுகிறது

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் செஞ்சொற் புலவரும், புறநானூறு என்ற நூலில் 'உற்றுழி உதவியும்' எனத் தொடங்கும் பாடலில் 'அறிவுடையோன்வழி அரசும் செல்லும்' என்று தான் கூறுகிறாரே ஒழிய 'கற்றவன் வழியே அரசு செல்லும்' என்று கூறினாரில்லை.

'கற்றறிந்தார் கூறும் கருமப் பொருள் இனிதே' என்னும் இனியவை நாற்பது·32 ஆம் பாடற் பகுதியும் கற்றலும் அறிதலும் வேறு என்பதையே தெளிவுபடுத்துகிறது.

முதுமொழிக் காஞ்சி என்ற நூலில் 'கற்றதுடைமை காட்சியின் அறிப'—என்றும் முதுமொழிக் காஞ்சியும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது.

'நன்றியறிதல் பொறையுடைமை இன்னாச் சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்றலறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து.

எனும் ஆசாரக் கோவைப் பாடலில்—கற்றலையும்அறிவுடைமையையும் அடுத்ததுத்து வைக்காது வேறுபடுத்தியமையை நோக்குக.

தாயுமானவரும்,

'கற்றும் அறிவில்லாத என் கன்மனத்தை என்
சொல்கேன்'—என்று கூறும்போது தான் கற்ற அளவு தனக்கு அறிவு இல்லையே என்று வருந்துகிறார்.

திருவிளையாடல் புராணத்தில் நக்கீரனைக் கரையேற்றிய படலத்தில் வரும்

'ஏன்ற வேந்தன் இலாக்குடி ஈட்டமும் மின்கதிர்
கான்ற நாயக மாமணி போகிய கண்டியும்
ஆன்ற ஞான மிலாதவர் கல்வியும் ஆனதே
சான்ற கீரனிலா தவை கூடிய சங்கமே.'

என்ற பாடலின் மூன்றாம் அடி கல்விவேறு; ஞானம் வேறு என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

கரந்தைத் தமிழ்ச் சங்க வரலாறு

புலவர் இரா. சின்னத்தம்பி, M.O.L., M.Phil.

பாண்டியர்கள் வளர்த்த முச்சங்கங்களின் நினைவாக, முத்தமிழையும் வளர்க்க வேண்டுமென்ற எண்ணம், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழ் உணர்வுடையோர் உள்ளங்களில் எழுந்தது. தமிழ் தமிழ்நாடு இவற்றைக் குறித்த சில ஆராய்ச்சிக் கட்டுரைகள், சென்னை, கல்கத்தா, கொழும்பு, இலண்டன் முதலிய நகரங்களிலிருந்து வெளிவந்த ஆங்கிலத் திங்களிதழ்களில் வெளிவந்தன தமிழின் நிலையைப் பாதுகாக்க, பற்பல அறிஞர்கள் முதலில், இவ்வாறு தனித்தனி முயற்சியை எடுத்துக் கொண்டனர். இம்முயற்சியைப் பொது நிறுவனங்கள் வாயிலாகச் செய்வதே சாலச் சிறந்தது என்ற எண்ணம் பின்னர்த் தோன்றியது. அவ்வாறு நிறுவப்பட்டவற்றுள் மதுரைத் தமிழ்ச் சங்கம் முதல் இடத்தைப் பெற்றது. இரண்டாவது இடத்திற்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் உரியதாயிற்று.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மொழியை ஆதரிக்கும் மன்னர்கள் இல்லாத நிலையில் தமிழகம் இருந்தது. இருந்த சில சிற்றரசர்களும் ஆங்கில அரசுக்கு அடங்கி நடக்க வேண்டிய நேரம். நாட்டில் தன்னுரிமை இல்லை. செல்வர்களில் பலர் கோயில் வழிபாட்டில் ஈடுபட்டு, இசை, நடனம் போன்றவற்றில் எண்ணத்தைச் செலுத்தினர். தமிழ் உணர்வு, தமிழ்ப் பண்பாடு இவற்றைப் பற்றிப் பெரும்பாலோர் கவலைப்படாத நிலைமை நாட்டில் இருந்தது.

இந்நிலையில் அரசியல் விழிப்புணர்ச்சியும் மொழி உணர்வும் கொண்ட தலைவர்கள், சங்கம் வைத்து மொழி வளர்க்க விருப்பங் கொண்டனர். ஆரவாரமின்றி, போராட்டமும் இன்றி, அறவழியில் நின்று ஒருபாற் கோடாமல், வரலாற்று உண்மைகளைச் சொல்லி அதன் மூலம் சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த எண்ணினர்.

1. சங்கம் வைத்து
2. தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தி
3. ஏடுகள் பதிப்பித்து

4. வரலாற்று நூல்கள் எழுதி
6. செய்தித்தாள் நடத்தி

மொழி உணர்வை நாட்டு மக்களிடையே பரப்ப முற்பட்டனர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்:

இராமனாதபுரத்துச் சீமையை மேற்பார்த்து ஆட்சி புரிந்தவர், பொன்னுச்சாமித் தேவராவார். இவரது அருந்தவப் புதல்வரே பாண்டித்துரைத் தேவராவார். பாண்டித்துரைத் தேவர், ஒருமுறை மதுரைக்கு வருகை தந்த பொழுது திருக்குறள், கம்பராமாயணம் ஆகியவற்றை யாரிடமிருந்தாவது வாங்கி வருமாறு ஏற்பாடு செய்தார். யாரிடமும் கிடைக்காமல் அவற்றைப் புத்தகக் கடையிலிருந்து விலைக்கு வாங்கி வந்து வள்ளல் பாண்டித்துரையிடம் தந்தனர். முச்சங்கங்களை வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் யாரிடமும் இவ்விரு நூல்களும் இல்லாதது குறித்துப் பாண்டித்துரைத் தேவர் மனம் வருந்தினார். இன்று முச்சங்கங்களை வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் மீண்டும் ஒரு சங்கம் வைத்துத் தமிழ் மொழியை வளர்க்க எண்ணங் கொண்டார். இவருடைய பெருமுயற்சியின் காரணமாக 14-9-1901 இல் மதுரையில் நான்காவது சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இராமனாதபுரத்து அரசர் பாஸ்கர சேதுபதி இச்சங்கத்திற்கு ஊக்கம் அளித்து வந்தார். 'செந்தமிழ்' என்ற திங்கள் ஏடும், இச்சங்கத்தின் சார்பில் தொடங்கப் பெற்றது. இலக்கண, இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவ்விதழில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. 'சேதுபதி செந்தமிழ்க் கல்லூரி' என்ற பெயரில் புலவர் கல்லூரியும் தொடங்கப் பெற்றது. 'பாண்டியன் புத்தக சாலை' என்ற பெயரில் நூல் நிலையமும் அமைக்கப் பெற்றது. கிடைத்தற்கரிய ஏட்டுச் சுவடிகள் பலவற்றைத் தொகுத்தும், சிலவற்றை அச்சேற்றியும் வெளியிட்டு வருகிறது. இவ்வாறு நான்காவது தமிழ்ச் சங்கம் தன் நிலைக்கேற்பத் தக்காங்கு தமிழ்த் தொண்டு புரிந்து வருகிறது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாக்களைத் தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலும் நடத்தி வந்தனர். 1909 ஆம் ஆண்டு அதன் ஒன்பதாவது ஆண்டுவிழா தஞ்சாவூரில் நடைபெற்றது. அப்பொழுது 'தஞ்சைத் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரில், தஞ்சாவூரில் ஒரு தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கினர். இச்சங்கச் சார்பில் 'தமிழகம்' என்ற இதழும் நடத்தப் பெற்றது. ஆற்றல் மிக்க தலைவரொருவர்

இச்சங்கத்திற்கு இல்லாமையினால் இச்சங்கம் நெடிது நிற்காமல் மறைந்து போயிற்று.

இலக்கணக் கடல் என அழைக்கப் பெற்ற சோழவந்தான் அரசஞ் சண்முகனார், தம்முடைய தொல்காப்பியப் பாயிரவிருத்தி நூலை அச்சிடும் பொருட்டு, தஞ்சாவூருக்கு வந்திருந்தார். இவருடைய நெருங்கிய நண்பராகிய புலவர் வி. சாமினாதப் பிள்ளை தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஆழ்ந்து கற்றுப் பெரும் புலவராக விளங்கினார். இந்த இருவரின் முயற்சியால் கரந்தையில் வடவாற்றங் கரையில் அமைந்திருந்த பஞ்சநதப் பாவா மடத்தில் 'வித்யாநிகேதன்' என்ற பெயரில் தமிழ்ச்சங்கம் ஒன்று தோற்றம் பெற்றது. வங்காளத்தில் புகழ்பெற்று விளங்கிய இரவிந்திரநாத் தாகூரின் 'சாந்திநிகேதனம்' போன்று இச் சங்கத்திற்கு வித்யாநிகேதன் எனப் பெயரிட்டனர்.

இச்சங்கத்தின் தலைவராகக் கோபாலசாமி ரகுநாத ராசாளியாரும், செயலாளராகப் புலவர் வி. சாமிநாதப் பிள்ளையும் பொறுப்பேற்றனர்.

இராதா கிருட்டிணப் பிள்ளை

நீ. கந்தசாமிப் பிள்ளை

தட்சிணாமூர்த்திப் பிள்ளை

கலியாணசுந்தரம் பிள்ளை

கவியரசு வேங்கடாசலம் பிள்ளை

அரசஞ் சண்முகனார்

பாலசுப்பிரமணியப் பிள்ளை

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

ஆகியோர் இதன் உறுப்பினர்களாக இருந்தனர். உ. வே. சாமிநாதையர் இச்சங்கத்திற்கு வந்து தங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இச்சங்கத்திற்குப் பாண்டித்துரைத் தேவரின் ஆதரவும் இருந்தது.

வித்யாநிகேதனின் சங்கத் தலைவராகிய கோபால ரகுநாத ராசாளியார், தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் புலமை பெற்றவர். சங்க நிகழ்ச்சிகள் முறையாக நடைபெற வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருப்பவர்.

செயலாளராகிய புலவர் வி. சாமினாதப் பிள்ளை, இளைய உறுப்பினர்களிடம் ஆணை பிறப்பித்து, கடமையைச் செய்ய முற்பட்டார். இதனால் வெறுப்புற்ற சிலர் 'இளைஞர்களாகிய நாம் ஏன் தனியாக ஒரு சங்கத்தை ஏற்படுத்தக் கூடாது' என்று எண்ணத் தொடங்கினர். இவ்வெண்ணத்தின் விளைவாகக் கரந்தையில் கந்தப்பச் செட்டியார் சத்திரத்தில் இளைஞர்கள் கூட்டம் ஒன்று கூட்டப்பெற்றது.

இவ்விளைஞர் குழுவிற்குத் இராதா கிருட்டிணன் தலைமை தாங்கினார்; வித்யாநிகேதனிலிருந்து விலகிப் புதிய சங்கம் தோற்றுவிக்க வேண்டிய நிலைமையை விளக்கினார். இளைஞர் குழு, மகிழ்ச்சியோடும், உறுதியோடும் இதனை வரவேற்றது. தமிழ்ச்சங்கம் கரந்தையில் அமைவதாலும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தை ஒட்டியே பெயர் வைக்க விரும்பியதாலும், இச்சங்கத்திற்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் எனப் பெயரிட்டனர்.

இதன் தொடக்கவிழா 14—5—1911 இல் (விரோதிகிருது-வைகாசி முதல் நாள்) ந.மு. வேங்கடசாமி நாட்டார் தலைமையில் நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர்களாகப் பதினெட்டுப்பேர் பணியாற்றினர்; தலைவர், துணைத்தலைவர், செயலாளர் முதலியோரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். சட்டத்துறையோடு தமிழும் ஆங்கிலமும் அமைவுறக் கற்ற உமாமகேசுவரனார் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த இராதா கிருட்டிணனின் உடன்பிறந்தோராவார்.

''தாய் மொழியின் வளர்ச்சிக்காகவே இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. 'தொண்டு-தமிழ் முன்னேற்றம்' என்பது இதன் கொள்கை ஆகும். உலக மக்களிடையே தமிழின் பெருமையைக் கூறுவதுதான் இதன் நோக்கம்'' என்று சங்கத்தின் தலைவராகிய உமாமகேசுவரனார் கூறுவார். தமிழ்நூல்களையும், தமிழர் பண்பாட்டையும், அவர்தம் பழம்பெருமையினையும். உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரப்புவதுதான் இதன் தலையாய குறிக்கோள் ஆகும்.

தஞ்சாவூர் நகரத்திற்கு வடக்கே ஒருகல் தொலைவில் கரந்தை உள்ளது. இங்குக் காவிரியாற்றின் கிளைநதியாகிய வடவாற்றின் வடகரையில் தமிழ்ச்சங்கம் அமைந்துள்ளது. கரந்தை மறவர் உறங்கிய நேரத்தில், அவர்களின் பசுக்களை வெட்சியார் கவர்ந்து செல்வர்-

விழித்த கரந்தையார் வீறுபெற்று, வீரப்போரிட்டு, இழந்த ஆநிரை-களை மீட்பர். இதனைக் 'கரந்தைத் திணை' என்று தமிழ் இலக்கணம் கூறும். சங்கம் வைத்து மொழியாண்ட முன்னோர் புகழ், இடைக்-காலத்தில் குன்றியதை, மீண்டும் நிலைநிறுத்தத் தொடங்கிய நிகழ்ச்சி-களில், கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்-றுள்ளது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றிச் செயலாற்றத் தொடங்கிய பிறகு, வித்யாநிகேதன் செவ்வனே செயல்படவில்லை. வித்யாநிகே-தனின் தலைவராகிய கோபாலசாமி ரகுநாத ராசாளியார், சிறிதும் மனம் மாற்றம் கொள்ளாமல் தமிழ்வளர்ச்சி ஒன்றையே கருதி, புதி-தாகத் தோன்றிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு உதவ முன் வந்தார்.

நூலகம் :

பரிதாபி ஆண்டு, ஆனிமாதம் 31 ஆம் நாள் (1912) சங்கத்-திற்கென ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தப் பெற்றது. இந்நூல் நிலையம் 'கரந்தைத் தமிழ்ச் சங்கக் கலா நிலையம்' என்ற பெயரில் தொடங்கியது. கொடைவள்ளல் கோபாலசாமி ரகுநாத ராசாளியார் இந்நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார்

உமாமகேசுவரனார் புதிய நூல்களை விலைக்கு வாங்கிப் படித்து விட்டு அவற்றைத் தன் சிறிய தந்தையார் சுப்புராயப் பிள்ளையின் பெயரில் அன்பளிப்பாகச் சங்கத்திற்குக் கொடுத்து விடுவார். கொடை வள்ளலும் ஆண்டிப்பட்டி சமீன்தாருமாகிய கானாடு காத்தான் பெத்தாச்சிச் செட்டியார், தம்மிடமிருந்த ஆயிரக்கணக்கான தமிழ், ஆங்கில நூல்களைச் சங்கத்திற்கு நன்கொடையாகத் தந்துதவினார் இந் நன்கொடைக்கு நன்றி காட்டும் முறையில் சங்கத்தார், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கலா நிலையத்தைப் „பெத்தாச்சி புகழ் நிலையம்'' எனப் பெயர் மாற்றினர். தொடக்கத்தில் இருபது நூல்-களைக் கொண்டிருந்த நூல் நிலையம் இன்று ஏறத்தாழ பதினோ-ராயிரம் நூல்களைப் பெற்று விளங்குகிறது. இந் நூல் நிலையம் தமிழகத்தின் தலைசிறந்த நூல் நிலையங்களுள் ஒன்றாகும். சங்கத்-தின் வளர்ச்சியோடு, சங்க நூல் நிலையமும் வளர்ந்து வருவது, உமாமகேசுவரனாரின் உள்ளம் போன்ற உயர்விற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று சட்டம் பயின்ற சங்கத் தலைவர் உமாமகேசுவரனார் எண்ணங் கொண்டார். 1860 ஆம் ஆண்டு, 21 வது சட்டத்திற்கிணங்க, சங்கம் 1914 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி (ஆனந்த-சித்திரை 10 ஆம் நாள்) பதிவு செய்யப் பெற்றது.

சங்கத்திற் கென்று தனியாகக் கட்டிடம் இல்லாத நிலையில், சங்கக் கூட்டங்கள் அப்பாவுச் செட்டியார் சத்திரத்தில் நடைபெற்றன. சங்க நூல் நிலையம் உமாமகேசுவரனார் இல்லத்தில் செயலாற்றி வந்தது. சங்கத்திற்கென உரிமை பெற்ற தனியிடம் வேண்டுமெனச் சங்கத் தலைவர் விரும்பினார்; தம் விருப்பத்தைப் பெத்தாச்சி செட்டியாரிடம் தெரிவித்தார். செட்டியாரும் கரந்தையில் பற்பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார். வடவாற்றின் வடகரையில் பாவா மடத்திற்குச் சொந்தமான வெற்றிடம், ஏற்புடையதாக அமையுமெனச் செட்டியார் உளங்கொண்டார். 1923 ஆம் ஆண்டில் அவ்விடத்தை பெத்தாச்சிச் செட்டியாரின் உதவியுடன் உமாமகேசுவரனார் விலைக்கு வாங்கினார்.

தமிழ்ப் பெருமன்றம்:

சங்கத் தலைவர் உமாமகேசுவரனார், சங்கத்திற்கெனத் தமிழ்ப் பெருமன்றம் காணும் பொருட்டு நிதி சேர்ப்பதற்காகக் குலுக்கல் சீட்டு முறை ஒன்று ஏற்படுத்தினார். இதன் மூலம் செலவு போக, பதினோராயிரம் ரூபாய் கிடைத்தது. கொடை வள்ளல் பெத்தாச்சி செட்டியார், கட்டிட நிதிக்கென்று ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார். அதுபோன்றே கோபாலசாமி ரகுநாத ராசாளியரும், ஆயிரம் ரூபாய் கட்டிட நிதி உதவிக்கென்று ஈந்தனர் இவ்வாறு கிடைத்த பொருளுதவியைக் கொண்டு, சங்கத் தலைவர் உமாமகேசுவரனார், பொறியியல் வல்லுநரும், தம் தங்கையின் கணவருமாகிய திரு. சாம்பசிவம் பிள்ளையின் உதவியுடன் தமிழ்ப் பெரு மன்றத்தைக் கட்டி முடித்தார்.

(தொடரும்)

எழுத்தாளருக்கு வேண்டியது கருத்துத் தெளிவா? எழுத்து வன்மையா?

பழனி. அரங்கசாமி

மிகச் சிறந்த எழுத்தாளருக்கும் வேண்டிய திறமைகள் இரண்டு. ஒன்று கருத்துத் தெளிவு. மற்றொன்று எழுத்து வன்மை அடிப்படையான சிந்தனையின்றி வெறும் சொல்லடுக்குகளாலே சிறந்த இலக்கியங்களைப் படைத்துவிட முடியாது. கருத்துத் தெளிவு, எழுத்து வன்மை, சொல்லோட்டம் இவற்றோடு பரந்துபட்ட இலக்கிய அறிவும் இருக்குமாயின், படைக்கப்படுகின்ற இலக்கியம் ஒளி வீசி மணம் பரப்பும். இவற்றில் ஏதேனும் ஒன்று பிழைபட்டுப் போனால் எழுத்தாளர் தரங்குன்றிய பரிதாப நிலைக்கு ஆட்பட்டு விடுவார். காவியங்களுக்கு மட்டுமின்றி கட்டுரைகளுக்கும் இது பொருந்தும்.

மறவர் என்ற சொல், வீரர் என்ற பொருள்படுவது. பழியொடு படராத அருஞ் செயலைச் செய்பவரும், வில்லேந்திய வீரரும் பண்டை இலக்கியங்களில் மறவர் என்ற சொல்லால் குறிக்கப்பட்டனர். மத்தியப் பிரதேச மாநிலத்தில் கொலைக்கு அஞ்சாமல் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டோரைக் குறிப்பிடுதற்கு மறவர் என்ற சொல்லை, உலகத்தமிழ் மாநாட்டு மலரில் தாம் எழுதிய கட்டுரையில் பயன்படுத்திய எழுத்தாளரின் அடிப்படையான இலக்கிய அறிவு பற்றி நமக்கு ஐயமேற்படுகிறது. நெல்லை, முகவை, மதுரை மாவட்டங்களில் வாழும் மறவர் குலப் பெருமக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற முறையில் வழக்கறிஞர் திரு. கந்தசாமி, தமிழ்ச்சங்கச் செயலர் திரு டி. பி. எம். பெரியசாமி ஆகிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும் இக் கட்டுரையினைத் திரும்பப் பெறவேண்டும் என்று அரசினருக்கு வேண்டுகோளும் அறிக்கையும் விடுத்தனர். இதனையொட்டிச் சென்ற பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் நிகழ்ந்த தமிழக சட்டமன்-

விவாதத்தில் இக் கருத்தினை வலியுறுத்தி கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்மொழிந்து பேச, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களான திரு சித்தன் (திருமங்கலம்), திரு சுந்தரராஜன் (திருமயம்) தி. மு. க உறுப்பினரான திரு. துரைமுருகன் ஆகியோர் பங்கெடுத்துக் கொண்டு 'திரும்பப் பெறவேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்தினர். அரசினர் தரப்பில் வந்த பதில் திருப்தி அளிப்பதாயில்லை. இதற்கிடையில் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து குறிப்பிட்ட எழுத்தாளரான நாவலாசிரியை திருமதி. ராஜம் கிருஷ்ணன் எழுதிய கடிதம் கீழே வெளியிடப்பட்டுள்ளது. எழுத்தாளருக்கு 'இங்கிதம்' வேண்டும்; அதுவும் இலக்கியச் சொல்லினை எத்தகு கவனமுடன் ஆளுதல் வேண்டும் என்பதற்கும் இந்நிகழ்ச்சி ஒரு சான்றாக அமைகிறது.

Mrs. Rajam Kri hnan

10, Port St.,
Tambaram East,
MADRAS—600 039
23—2—81

பெறுநர்: டாக்டர் வி. ராமகிருஷ்ணன், பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தேவர் பேரவை

அன்புடையீர்,

வணக்கம்!

தங்கள் கடிதம் கண்டேன்.

ஆண்மையும் அஞ்சாமையும் மிகுந்து திகழும் தங்கள் பெருமைக்குரிய சமுதாயத்தினரை மறைமுகமாக இழிவு படுத்தவே நான் எனது 'புதினக்கலை' கட்டுரையில், உலகத்தமிழ் மாநாட்டு மலரில் குறிப்பிட்ட சொல்லைத் தாங்கள் கருதுவதாகச் சுட்டியிருப்பது, என்னைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது.

இச்சொல், வட நாட்டில், அஞ்சாமையும் வீரமும் மிகுந்த ராஜபுத்திரர்கள் என்பதைக் குறிக்கும் சொல்லாக, வட நாட்டிலே அவர்கள் வாழ்வதைச் சுட்டியிருக்கிறேனே ஒழிய, தங்களைக் குறிப்பாக்கும் என்பதைக் கனவிலும் கருதியிருக்கவில்லை. மேலும், வரலாற்று நிகழ்ச்சியில் அத்தகைய மக்கள் கொடியவர்களாக மாறிக் குற்றங்கள் இழைத்ததையே சுட்டுவதாக நான் கருதி, இச்சொல் பற்றி தகுந்த தமிழறிஞர்களிடம் உரையாடிய பின்னரே உபயோகித்தேன் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் 'வன்மையாகக் கண்டனமும் தெரிவித்து, சட்டசபையிலும் இதைக் கொண்டு சென்று என்னைத் தெளிவுறுத்தியமைக்கு நன்றி.

இச் சொல் தங்கள் பெருமைக்குரிய சமுதாயத்தைக் குறித்து எழுதப்படவில்லை என்றும், இது தேவர் சமுதாயத்தைப் புண்படுத்தியிருந்தால மன்னிப்பும் கோருகிறேன். இவ்வாறு தாங்கள் தவறுதலாகக் கருத இடம் ஏற்பட்டு விட்டமைக்கும் வருந்துகிறேன். இனி ஒரு போதும் இவ்வாறு நடக்காது.

எழுத்தாளர்களாகிய எங்கள் சுதந்தரம் இவ்வாறு மிகமிகத் தெளிவாகத் துலக்கப்படும் ஜனநாயகத் தன்மையை எனக்குப் புரிய வைத்ததற்கும் மிகுந்த நன்றி.

ராஜம் கிருஷ்ணன்.

வானவில்

(கவிஞர் எச். முஸ்தபா, M. A., கீழக்கரை.)

நாவாய் ஓடிடும் நதிகளின் மேலே.
கப்பல் சென்றிடும் கடல்களின் மீதே.
ஆயின், முகில்கள் ஆகா யத்தில்
அலையும் அழகே, அவற்றினும் அழகு!
ஆற்றின் மேலே அமைபா லங்கள்
கவினார் சின்னம், கருத்தின் வண்ணம்!
ஆயின், வான்வில் ஆக்கிடும் பாலம்
விண்ணுல கோடு விருட்சம் மேவும்.
நிலத்தினின் றவ்வில் நெடுவான் பொருந்திட
அமைத்திடும் சாலையே, அனைத்தினும் அழகு!

Christina Rossetti என்பார் எழுதிய
'The Rainbow' என்னும் ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம்.

மணியம் பிரஸ்,
44-B, வெங்கடபதி அய்யங்கார் தெரு.
மதுரை-9.